# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6 செய்தி 01 மார்ச் 2020 விலை ரூ 10/-




விநியோகம், உற்பத்தி மற்றும் ஜி.சி.சி வட்டங்களில் பணியாற்றும்
ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு
ரூ. 380/- தினக்கூலியாக வாரியமே வழங்கிடவும்
அவர்களை நிரந்தரப்படுத்திடவும் வலியுறுத்தி
தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின்
மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் உண்ணாவிரதம்
18.02.2020 சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு



மாநிலம் முழுவதும்
கேங்மேன் பயிற்சி முகாம்



செங்கல்பட்டு மின்வட்டக்கிளையில்
மாநிலத் தலைவர் தி.ஜெய்சங்கர்
பயிற்சியளிப்பு



திருவண்ணாமலை மின்வட்டக் கிளையில்
மாநில செயலாளர்கள் கே.காங்கேயன் மற்றும் ஆர்.சிவராஜ்
ஆகியோர் தலைமையில் பயிற்சி





# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

விலை ரூ. 10/-

மார்ச் 2020


**உள்ளே....**


- ★ சிஏஏ,என்ஆர்சி, என்பிஆர் என்ற பெயரில் தேசத்தை துண்டாட அனுமதியோம்.
- ★ அதானிக்காக மூடப்படும் அனல் மின் நிலையங்கள்
- ★ வஞ்சிக்கப்படும் மின்ஊழியர்கள் பணமில்லையா மனம் இல்லையா.
- ★ தமிழக நிதிநிலை அறிக்யையும் மின்சாரத் துறையும்.
- ★ மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் உண்ணாவிரதம்
- ★ பணப்பயன் வழங்க காலதாமதம் ஏன்
- ★ எல்.ஐ.சி. பங்கு விலக்கலை ஏன் எதிர்க்க வேண்டும்.
- ★ எழுந்து நிற்போம் இணைந்து நிற்போம்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம்
சென்னை 600 005.


# CAA, NRC, NPR - என்ற பெயரில் தேசத்தை துண்டாட அனுமதியோம்!

மத்திய பி.ஜே.பி. அரசு பதவி ஏற்ற நாள் முதல் கடந்த ஆறு ஆண்டுகளாக தேசத்தில் எந்தவிதமான புதிய தொழில்களை துவக்கி வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. தொழிலாளி வர்க்கம் தனது உரிமைக்காக போராடும் போதெல்லாம் அதை திசை திருப்புவதற்காக புதிய யுக்திகளை பொது மக்கள், தொழிலாளர்கள் மீது திணித்து பிரச்சனையை திசை திருப்ப பார்க்கிறது. இன்று குடியுரிமை திருத்த சட்டத்தை அமலாக்குவதற்கு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு எதிராக போராடும் சிறுபான்மை மக்கள் மீது கொடூரதாக்குதலை பி.ஜே.பி,ஆர்.எஸ்.எஸ். வகையறாக்கள் நாடு முழுவதும் மக்கள் போராடி வரும் இடங்களில் கலவரத்தை ஊக்குவிக்கின்ற வகையில் பேசிவருகிறார்கள். இதற்கு மத்திய அமைச்சர்களும் விதிவிலக்கல்ல.

தேசிய நலன்களை முன்வைத்து மக்களுக்கு தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கு பதிலாக ஆர்.எஸ்.எஸ்-ன் நிகழ்ச்சி நிரலை மத்திய பி.ஜே.பி. அரசு தனதாக்கிக் கொண்டு சட்டங்களை உருவாக்கிக் கொள்கிறது.

டெல்லி ஷாகிம் பாக் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக மக்கள் போராடி வரும் நிலையில் பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ். வகையறாக்கள் கலவரத்தை திட்டமிட்டு நடத்தி 38 பேர் பலியாக காரணமாக இருந்துள்ளனர். ஜே.என்.யு. மாணவர்கள் போராடி வரும் நிலையில் அங்கேயும் கலவரத்தை ஏற்படுத்தி மாணவர்கள் மீது தனது மாணவர் அணியின் மூலம் தாக்குதலை தொடுத்துள்ளது.

அதே போல நிதி நிலை அறிக்கையிலும் நடுத்தர வர்க்கத்தையும் தொழிலாளர்களையும் பாதிக்கின்ற வகையில் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே பண மதிப்பு இழப்பு, ஜி.எஸ்.டி.யால் வேலை இழந்தவர்கள் அவதிப்படும் நிலையில் அமைதியாக போராடும் மக்களிடையே கலவரத்தை உருவாக்கி கலவரம் செய்வதன் மூலம் மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. சந்தடி சாக்கில் எரிவாயு உருளை விலையும் ஏற்றி விட்டது.

அரசின் பொதுத்துறை பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் பொதுத்துறைகளையும் விட்டு வைக்கவில்லை. மக்களை சிந்திக்க விடாமல் அடுக்கடுக்காய் சுமைகளை சுமத்தி அவர்கள் சிந்தனையை திசை திருப்பும் வேலையை கார்ப்பரேட் மோடி அரசு செய்து வருகிறது.

புதிய அனல் மின் நிர்மான பணிகள், அல்லது மரபுசாரா எரிசக்தி வழியில் மின் உற்பத்தியை துவங்காமல் சுற்றுச்சூழலை காரணம் காட்டி மாநில அரசுகளின் அனல் மின் உற்பத்தி நிலையங்களை மூடச்செய்து மாநில அரசுகள் மின்சாரத்தை வாங்க தனியாரிடம் கையேந்தும் அவலநிலைக்கு தள்ளப்போகிறது.

எல்.ஐ.சி, வங்கி, பாரத் பெட்ரோலியம், மின்சாரம், இரயில்வே, தொலைப்பேசி மற்றும் கோல் இந்தியா உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதற்கும், தனியார்மயப்படுத்துவதற்கும் வேகமாக செயல்படும் மோடி அரசு இந்த ஆறு ஆண்டில் எந்த ஒரு பொதுத்துறை நிறுவனத்தையும் உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உழைப்பாளிகளின் உழைப்பால் உயர்ந்த பொதுத்துறை நிறுவனங்களை சொந்த சுயஇலாபத்திற்காக விற்க நினைப்பது வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யும் செயலாகும்.

இந்த நிலையில் தான் இந்திய உழைப்பாளி மக்கள் தங்களது உரிமைக்கான போராட்டத்தை நடத்துகின்ற பொழுது அவர்களது கவனத்தை திசை திருப்புவதற்காக குடியுரிமைத்திருத்த சட்டத்தை அமலாக்கி இந்திய மக்களையே சொந்த நாட்டில் அகதிகளாக மாற்ற நினைக்கிறது. உழைக்கும் வர்க்கம் தனது நலனுக்காக போராடுவது மட்டுமல்ல, தேசத்தின் இறையாண்மையும், மதச்சார்பின்மையும், பாதுகாப்பது நமது தலையாய கடமை.

வர்க்கத்தை இணைப்போம்!

தடைகளை உடைப்போம்!!

எல்.ஐ.சி, வங்கி, பாரத் பெட்ரோலியம், மின்சாரம், இரயில்வே, தொலைப்பேசி மற்றும் கோல் இந்தியா உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனைக்கு தயார்

- நிதியமைச்சர்



# அதானிக்காக மூடப்படும் அனல் மின் நிலையங்கள்!

*அனல் மின் நிலையங்களை மூடுவதோடு அந்த இடங்களை அதானி வகையறாக்களுக்கு கொடுப்பதற்கான ஒரு மறைமுக ஏற்பாடு*



இந்திய மின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் 63 சதவீதம் அதாவது மொத்த மின் உற்பத்தியில் அனல் மின் நிலையங்களே உற்பத்தி செய்து வருகிறது. 22.5 சதவீதம் மரபுசாரா எரிசக்தி (காற்று. சூரிய ஒளி , தாவர எண்ணெய், சாண எரிவாயு) மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இந்திய மின் உற்பத்தியில் அனல் மின் நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒரு பெரும் பங்கை செலுத்தி வருகிறது. அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி ஒரு சில மாநிலங்களில் மட்டுமே கிடைக்கிறது. குறிப்பாக சத்தீஷ்கர், ஒரிசா, மேற்கு வங்கம், பீகார், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலிருந்து மட்டுமே நிலக்கரி கிடைக்கிறது. அனல் மின் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு நிலக்கரியை கொண்டு செல்வதில் கூடுதல் செலவீனம் இருந்தாலும் மக்களின் தேவையை அறிந்து மின்சாரத்துறை சேவைத்துறையாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து உருவாக்கப்பட்டது தான் அனல் மின் நிலையங்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த போது 1156 மெகாவாட் மின் உற்பத்தியில் துவங்கி 78 ஆண்டுகள் கடந்து 3,44,689 மெகாவாட் மின் உற்பத்தியை அனைத்து வழிகளிலும் ( அனல், புனல், எரிவாயு, அணு,மரபுசாரா எரிசக்தி) செய்துள்ளது.

தமிழகத்தில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி இருப்பதை கண்டறிந்து அதன் மூலம் மின் உற்பத்தி செய்யாலாமென உறுதியாக நின்று போராடியவர் அருமைத் தோழர் பி.ராமமூர்த்தி அவர்களும் மற்றும் தோழர் அனந்த நம்பியார் அவர்களும் ஆவார்கள். இதற்கு பின்பு தான் அன்றைக்கு இருந்த மத்திய அரசின் தொழில்துறை அமைச்சராக இருந்த திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரி நெய்வேலியில் நிலக்கரியை தோண்டி எடுப்பதற்கும், மின் உற்பத்தி செய்வதற்கும் நிதி ஒதுக்கினார். இது வரலாறு. தற்சமயம் நெய்வேலியில் 2900 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற நிலையை எட்டி உள்ளது.

1956-ம் ஆண்டில் பணியை துவக்கி உற்பத்தியில் ஈடுபட்டு இன்றைக்கும் செயல்பட்டு வரும் நெய்வேலி அலகை மத்திய நிதி அமைச்சர் பட்ஜெட் அறிவிப்பால் மூடுவிழா காண உள்ளது. அதே போல மேட்டூர் அனல் மின் நிலையம் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையமும் விரைவில் காண உள்ளது. நாடு முழுவதும் 103 அனல்மின் உற்பத்தி அலகுகள் மூடப்படும் அபாயம் உள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றது. அதோடு மத்திய அரசின் நிலக்கரி எடுக்கும் கோல் இந்தியா நிறுவனமும் காணாமல் போய்விடும்.

இந்தியாவில் எடுக்கப்படும் நிலக்கரி எரியும் கலோரியின் அளவு 4000, இது எரியும் போது அதிகமான கார்பன் வெளியாகும். இதைக்கட்டுப்படுத்த நவீன தொழில் நுட்பங்கள் இன்றைக்கு வந்துள்ளது. ஆனால் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் எரியும் கலோரியின் அளவு 4700, இது அதிக அளவில் கார்பனை வெளியிடாது

என நினைக்கிறார்கள். உண்மை அதுவல்ல, வெளி நாடுகளில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதன் மூலம் அந்நியச்செலவாணி ஏற்படுவதோடு அதானிக்கு அந்த உரிமமும் வழங்கி அதானியை பெரும் முதலாளி ஆக்குகிறார்கள்.

பட்ஜெட் அறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்ட மாசுக்கட்டுப்பாட்டு அளவை விட அதிக கரும்புகையை வெளியேற்றும் அனல் மின் நிலையங்களை மூடுவதோடு அந்த இடங்களை வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என குறிப்பிடப் பட்டுள்ளது. இது மத்திய மாநில அரசுகளுக்கு சொந்தமான இடத்தை அதானிவகையறாக்களுக்கு கொடுப்பதற்கான ஒரு மறைமுக ஏற்பாடு.

மாநில அரசுக்கு சொந்தமான அனல் மின் நிலையங்களை மூடுவதன் மூலம் மின்சாரத்தை அதானியின் சூரிய சக்தி மூலமும், அதானியின் அனல் மின்சாரம் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்கும் நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்படும் நிலை உருவாகும். இந்தியச் சந்தையில் அம்பானிகளும், அதானிகளும் மட்டுமே இருக்கும் நிலை உருவாகும். மின்சாரம் என்பது எட்டாக்கனியாக, சந்தைப் பொருளாக மாறும். கிராமப்புறங்களுக்கு, விவசாயிகளுக்கு மின்சாரம் என்பது கேள்விக்குறியாக மாறும். இலவசங்கள் ரத்தாகும். அதிக விலை கொடுத்து விவசாயி மின்சாரத்தை பெற வேண்டி இருக்கும்.

மின்சார வாரியம் என்று ஒன்று நிச்சயமாக இருக்கும். ஆனால் அது அதானிக்கும் மக்களுக்கும் மீடியேட்டராகவே மட்டும் செயல்படும்.

அதோடு மின் நுகர்வோர்களின் இணைப்பில் தற்போது உள்ள பழைய கன்வென்ஷனல் மீட்டர்களை மாற்றி ப்ரிபெய்டு ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்து வதற்கான நடவடிக்கையும், அடுத்த மூன்றாண்டு களுக்குள் மாற்ற வேண்டும் என்றும், மின் நுகர்வோர் களே சப்ளையரை தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்க வேண்டும் என்றும் மின் வாரியங்களை விநியோக கம்பெனிகளாக (Discom) மாற்ற வேண்டுமென பட் ஜெட்டில் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்திய நாட்டில் 20 கோடிக்கு மேற்பட்ட வீட்டு மின் இணைப்புகளும் 5 கோடிக்கு மேற்பட்ட மின் இணைப்புகள் தாழ்வழுத்த வணிகப் பயன்பாட்டில் இருக்கிறது.

மின்சார சட்டதிருத்த மசோதா 2018ஐ முழுமையாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் (இந்த சட்ட திருத்த மசோதாவை எதிர்த்து மின் ஊழியர்கள் போராடி வருகிறார்கள்) இந்த மசோதாவில் சொல்லப்பட்ட தனியார் மின் உற்பத்தியாளர்களை தேர்ந்தெடுக்கும் உரிமையை மின்நுகர்வோர்களுக்கு வழங்கும் வகையில் மீட்டர்களை மாற்ற வேண்டுமென பட்ஜெட்டில் குறிப்பிட்டுள்ளார். தனியார் உரிமையாளர்களுக்கு இலாபகரமான மின் விநியோக பகுதியில் ஈடுபடுவதற்கு வசதியாக இருக்கும் வகையில் மீட்டர்களை மாற்றுவதற்கான ஏற்பாடு தான் இது.

இந்த ப்ரிபெய்டு ஸ்மார்ட் மீட்டர் மாற்றும் திட்டத்தால் மின் நுகர்வோர்கள், செல்போனுக்கு ரீசார்ஜ் செய்வது போல மின்சாரத்தை பெற்றுக் கொள்ளலாம். இதில் மறைந்திருக்கும் ஆபத்து என்ன வென்றால் மின் நுகர்வோருக்கு அதிக மின் கட்டணம் செலுத்தும் நிலை ஏற்படும். மேலும் ஸ்மார்ட் மீட்டர் மாற்றப் படுவதற் கான கட்டணத்தை மின் நுகர்வோர்களே செலுத்த நேரிடலாம். இந்திய நாடுமுழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கணக்கீட்டு பணியாளர்கள் ( Meter Readers) வேலை இழக்கும் நிலையோ, அல்லது மாற்று வேலைக்கும் செல்லும் அபாயமோ ஏற்படும் நிலை உள்ளது. நட்டம் விளைவிக்கும் பகுதிக்கு அரசுக்கு சொந்தமான மின் விநியோக கம்பெனிகளே செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மின்வாரிய தொழிலாளர்கள் வேலை இழப்பதுடன் புதிய வேலை வாய்ப்புகளும் பறிபோகும் வாய்ப்புள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் மோடி அரசு எந்தவொரு புதிய நிறுவனத்தையும் துவங்கவில்லை. மக்களின் வளர்ச்சியில் செயல்பட்டு வந்த உழைப்பால் உருவாக்கப்பட்ட பொதுத் துறை களை ஒவ்வொன்றாக கூவிக்கூவி விற்றுக் கொண்டு வருகிறது.

இந்த அரசு மக்களுக்கான அரசல்ல! தொழி லாளர்களுக்கான அரசல்ல, விவசாயிகளுக்கான அரசும் அல்ல, அப்படியானால் யாருக்கான அரசு? அதானி வகையறாக்களுக்கான அரசு.

இந்திய மின்துறையை நாசமாக்கும் மோடி
அரசின் கொள்கைக்கெதிராக ஆயிரம் ஆயிரமாய் மின்
ஊழியர்கள், நுகர்வோர்கள், விவசாயிகள்,
ஒன்றிணைவோம்.. போராடுவோம்...
மின்துறையை பாதுகாப்போம்...

**- எஸ்.இராஜேந்திரன்**




# வஞ்சிக்கப்படும் மின் ஊழியர்கள்...! பணமில்லையா மனம் இல்லையா ?

மின்வாரிய ஊழியர்களுக்கு 6 மாதங்களுக்கு மேலாக GPF, SLS, Double Wages வழங்கப்படாமல் உள்ளது. குறிப்பாக GPF என்பது மகளின் திருமணம், மருத்துவ சிகிச்சை, உயர்படிப்புக்காக தனது சேமிப்பிலிருந்து கேட்கப்படும் முன்பணமாகும். இவை கடந்த 6 மாதங்களாக மின்வாரியம் வழங்கிடவில்லை. மின்வாரிய நிதிநிலை சரியில்லை என்ற காரணம் காட்டி ஊழியர்கள் வஞ்சிக்கப்படுவதாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் சம்பளம் மற்றும் பென்சனுக்காக மட்டும் வாரியம் ஒதுக்க வேண்டிய தொகை சுமார் 775 கோடிகள். மின்வாரியத்தில் 90,000 பென்சன்தாரர்கள், 10,000 குடும்ப பென்சன்தாரர்கள் மற்றும் 85,000 ஊழியர்கள் பணி செய்கின்றனர். இவர்களுக்கான சம்பளம் மற்றும் பென்சன் என்பது ஒவ்வொரு மாதமும் முதல் தேதி கிடைக்குமா? கிடைக்காதா? என்ற பதற்றம் சமீபகாலமாக ஊழியர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. அதிலும் குறிப்பாக கடந்த 2 மாதங்களாக செய்தித்தாள்களில் மின்வாரிய நிதிநிலை பற்றி வெளிவந்த பின்பு இந்த பதற்றம் மேலும் கூடுதலாகி உள்ளது. தமிழக மின்வாரியம் மின் மிகை மாநிலம் என்று பல ஆண்டுகளாக சொல்லி வந்த அமைச்சர் முதல் முறையாக மின்சாரம் வெளியே வாங்குவதால் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சொல்லியிருப்பது ஊழியர்கள் மத்தியில் பரப்பரப்பான செய்தியாக உணரப்பட்டது. இந்த நிலையில் மின்வாரியத்தில் பணி புரியும் 85,000 தொழிலாளிகள் நிர்வாகத்தின் மீது கோபமாக இருப்பதை காண முடிகின்றது. இதன் வெளிப்பாடாக தமிழகம் முழுவதும் தன்னெழுச்சியான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது. இது பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். தொழிலாளியின் வியர்வை நிலத்தில் விழுவதற்கு முன்பாக அவனுக்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்ற வசனத்தை எங்கோ கேட்டதாக நினைவு. அது மின்வாரிய நிர்வாகத்திற்கு பொருந்துமா?

மின்வாரியத்தின் நிதி நிலைக்கு காரணம் தொழிலாளிகள் அல்ல, நிர்வாகமும் அரசும் தான் காரணம் என்று உறக்க சொல்ல வேண்டிய நேரமிது. 2001-ம் ஆண்டு வரை இலாபத்தில் இயங்கி வந்த மின்வாரியம் எப்படி நட்டத்திற்கு சென்றது. தமிழகத்தின் சுய தேவையை நாமே உற்பத்தி செய்யாமல் போனது முதல் காரணம். தமிழக வளர்ச்சி, தொழில் வளர்ச்சி காரணமாக ஆண்டுதோறும் 500 மெகாவாட் மின்சாரம் கூடுதல் தேவையாக இருந்ததை கணக்கில் கொள்ளாமல் தனியார் மின் உற்பத்தியாளர்களை நம்பியதால் வந்த கேடு இது. அதிக பணத்தை கொடுத்து மின்சாரம் வாங்கியதால் ஏற்பட்ட நெருக்கடி, 2003 முதல் மின்சாரமும், நிலக்கரியும் சந்தை விலையை விட கூடுதலாக கொடுத்து வாங்கியதால் ஏற்பட்ட நட்டம். (இது தொடர்பாக பல புகார்களும், வழக்குகளும் உள்ளது) தமிழகத்திற்கு தேவையான மின்சாரத்தை சுயசார்பு கொள்கையில் உற்பத்தி செய்யாமல் தனியார்மய கொள்கையை ஆதரிக்கும் வகையில் எடுத்த

நிலைப்பாடே இன்றைய மின்வாரியத்தின் நிதி நெருக்கடிக்கு அடிப்படை காரணமாகும்.

போதிய அளவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மின் துண்டிப்பு செய்த நுகர்வோரிடம், அரசு நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகை மட்டும் பல நூறு கோடிகள் வசூலிக்க முடியாமல் உள்ளது. இதைப்பற்றியெல்லாம் மின்வாரிய நிர்வாகத்திற்கு போதிய அக்கறையில்லை என்றே தோன்றுகின்றது. நிரந்தர பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்ததால் நிதி நெருக்கடி என்ற வாதமும் பொய்யானது. 34 மாதங்கள் நிலுவை தொகையில் 28 மாதங்கள் மறுக்கப்பட்டு வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் நட்டம் தொழிலாளிக்கு, இலாபம் வாரியத்திற்கு என்பது தான் உண்மை.

1988 முதல் வழங்கி வரும் இலவச மின்சாரம் அதற்காக அரசு தரவேண்டிய மான்யம் உரிய நேரத்தில் (மாதந்தோறும்) வழங்காததும் ஒரு காரணம். இலவச மின்சாரம் பயன்படுத்தப்படும் பம்பு செட்டுகளின் திறன் (HP) தோராய மதிப்பீடாக கணக்கீடு செய்து மானியம் வழங்கப்படுகின்றது. உண்மையான பயன்பாட்டுக்கும் வாரியம் பெறும் மானிய தொகைக்கும் பெருத்த இடைவெளி உள்ளது. இதுவும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

இவ்வாறு எண்ணற்ற காரண, காரணிகளை வைத்துக்கொண்டு, உயிரை பணயம் வைத்து வேலை செய்யும் களப்பணி ஊழியர்களுக்கு அவர்களுடைய தேவைக்காக போடப்பட்ட GPF, SLS, பயன்கள் கிடைப்பதில் காலதாமதம் செய்வதை ஏற்க முடியாது. அதிலும் கொடுக்காத GPF, பணத்திற்கு Recovery-ம், கொடுக்காத SLS மற்றும் Double Wages பணத்திற்கு Income Tax பிடித்தம் செய்தது, நிர்வாக அவலத்தின் உச்சம் என்று சொல்லலாம். செய்யாத குற்றத்திற்கு தண்டனை போல் உள்ளது இந்த நிகழ்வு.

அகில இந்திய அளவில் உள்ள சிறப்பான மின்வாரியங்கள் ஒரு சில மட்டும் தான், அதில் ஒன்று நமது தமிழக மின்சார வாரியம். நல்ல கட்டமைப்பு, திறமையான ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை கொண்ட நிறுவனம், நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதற்கு காரணம் ஊழியர்கள் அல்ல, பொறியாளர்கள் அல்ல, அதிகாரிகள் அல்ல, வாரியத்தின் தவறான நிர்வாகமும் அதன் கொள்கை முடிவுகளுமே காரணம் என்பதை நமது நிர்வாகிகள் அனைத்து பிரிவு அலுவலகங்கள் முன்பாக உறக்க சொல்ல வேண்டும். இனியும் மின்வாரிய நிதி நிலை காரணம் என்று சொல்லி பணப்பயன்களை காலம் தாழ்த்துவதை அனுமதியோம் என்று கோஷமிடுவோம்.

உறங்கிக் கொண்டிருக்கும் நமது கேடர்களை தட்டியெழுப்புவோம். ஒற்றுமை கரம் கோர்த்து ஓரணியில் நின்று போராடுவோம்.

போராட்டங்கள் இல்லாமல்
திண்டாட்டங்கள் தீராது....

**- தி.ஜெயசங்கர்**

# வீழ்ச்சி அடையும் உலக பொருளாதார

சீனாவை உலுக்கி வரும் 'கொரோனா' வைரஸ் உலக நாடுகளுக்கு பரவினால் உலக பொருளாதாரம் வீழ்ச்சி அடைய வாய்ப்புள்ளதாக மூடிஸ் அனலிடிகஸ் என்ற அமெரிக்க வர்த்தக நிதிச்சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவில் சுற்றுலா பயணம் மற்றும் தொழில் முழுமையாக முடங்கி விட்டது. சீனாவில் மட்டுமல்ல, சீனர்கள் ஆண்டுக்கு 30 லட்சம் பேர் சுற்றுலா பயணிகளாக அமெரிக்கா செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்காவும், பாதித்துள்ளது. முக்கிய விமான நிறுவனங்கள், சொகுசு கப்பல்கள் தங்களது பயண சேவையை நிறுத்தி விட்டன.

சீனாவில் இருந்து எந்த நாட்டுக்கு யார் சென்றாலும் மருத்துவ கண்காணிப்பில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் சிவப்பு மிளகாய் ஏற்றுமதி நின்று போய் விட்டது. கடந்த ஆண்டு 5411 கோடிக்கு ஏற்றுமதி ஆனது, என தகவல்கள் தெரிவிக்கின்றது. அதோடு அமெரிக்காவின் ஆப்பிள், நைக், ஜெனரல் மோட்டர்ஸ் போன்ற நிறுவனங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் சீனாவிலிருந்து வராத காரணத்தால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் சீனம் கெரோனாவை எதிர்கொண்டு எழும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் உள்ளது.



# தமிழக நிதி நிலை அறிக்கையும் மின்சாரத் துறையும்

2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை தமிழக துணை முதல்வரும் நிதி அமைச்சருமான திரு. ஓ.பி.எஸ். அவர்கள் மூன்று மணி நேரம் உரையுடன் சமர்ப்பித்துள்ளார். நிதி அமைச்சர் முன் வைத்த நிதி நிலை அறிக்கை உப்பு சப்பில்லாத அறிக்கை. திவாலான அறிக்கை கடன் சுமையை சுமத்திய அறிக்கை வேலை வாய்ப்பை உருவாக்காத அறிக்கை. இந்த அரசின் கடைசி நிதி நிலை அறிக்கை என பல கருத்துக்கள் நிலவுகின்ற நிதி நிலை அறிக்கை.

சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையில் மின் துறையை பற்றி குறிப்பிடும் போது தனி நபர் மின் நுகர்வில் 1467 யூனிட்கள் மின் நுகர்வு செய்து, இந்தியாவில் அதிக தனிநபர் எரிசக்தி பயன்பாடு கொண்ட மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று பெருமை பட குறிப்பிட்டுள்ளார்.

நிதி நிலை அறிக்கையில் மின்சார உற்பத்தியை பொருத்தவரையில் சில ஆண்டுகளாக மாநில மத்திய அரசுகளின் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சார கொள்முதல் போன்றவைகள் மூலம் 15,296 மெகாவாட் உற்பத்தி திறன் கூடுதலாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவுத்திறன் 31,780 மெகாவாட்டாக உள்ளது. இதில் 13,343 மெகாவாட் புதுப்பிக்கதக்க எரிசக்தி (சூரிய ஒளி காற்றாலை மின் உற்பத்தி) திறனும் அடங்கும் என்றும், அதனால் தமிழகம், மின் மிகை மாநிலம் என்றும் தற்பெருமை பேசுவதும் அறிக்கையின் உள் அடக்கமாகும்.

அறிக்கையில் தமிழக மின் உற்பத்தி திறன் 31,780 மெகாவாட் என்று குறிப்பிட்டு அதில் 13,343 மெகாவாட் புதுப்பிக்க தக்க மின் உற்பத்தி என்றும் குறிப்பிடுவதிலிருந்து, இது நிரந்தரமாக ஆண்டு முழுவதும் கிடைக்கும் உற்பத்தி ஆதாரமாக சொல்ல முடியாது என்று குறிப்பிடுவதிலிருந்து மொத்த மின் உற்பத்தி திறனான 31,780 மெகாவாட் லிருந்து 13,343 மெகாவாட் திறன் கழிந்தது விட்டால் 18,347 மெகாவாட் மின் உற்பத்தி என்பது அனல், புனல்,எரிவாயு, மத்திய தொகுப்பு அதீத விலையில் மின்சார கொள்முதல் ஆகியவற்றின் மூலமே 18,437 மெகவாட் மின் விநியோகம் உற்பத்தி செய்ய படுகின்றன என்று வாரிய புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதாவது

| | | | |
|---|---|---|---|
| அனல் | - | 4380 | மெகாவாட் |
| புனல் | - | 2307 | மெகாவாட் |
| எரிவாயு | - | 516 | மெகாவாட் |
| மத்திய தொகுப்பு | - | 6152 | மெகாவாட் |
| மின்சார கொள்முதல் | - | 5451 | மெகாவாட் |
| மொத்த மின் உற்பத்தி திறன் | - | 18746 | மெகாவாட் |

இதில் புனல் மூலம் மின் உற்பத்தி என்பது அதாவது 2307 மெகாவாட்டாகும் என்பது கோடைக் காலத்தில் தொடர்ச்சியாக மின் உற்பத்தி செய்யும் ஆதாரமாக கொள்ள முடியாது. இவைகளை பார்க்கும் போது கோடை தேவையை சமாளிக்க 16,439

மெகாவாட் மின்சாரமே கிடைக்கும் நிலையில் உள்ளது. 16439 மெகாவாட்டில் கூட 5451 மெகாவாட் மின்சாரம் வெளி சந்தையில் அபரிமிதமான விலை கொடுத்து வாங்கும் மின்சாரமும் உள்ளடங்குமாம்.

வெளி சந்தையில் மின்சாரம் வாங்குவோரை பொறுத்தவரையில் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் 3180 மெகாவாட்டுக்கும் சென்ற ஆண்டு கோடை தேவையை சமாளிக்க முதலில் 1000 மெகாவாட்டும், பின்னர் 500 மெகாவாட் மின்சாரம் வெளிசந்தையில் கொள்முதல் செய்ய மின்வாரிய ஓழுங்கு முறை அனுமதி அளித்தது, நீண்டகால ஒப்பந்தம், மின் தேவையை சமாளிக்க அனுமதி அளித்த 1500 மெகாவாட்டை சேர்தாலே 4680 மெகாவாட் தான். ஆனால் இவைகளை எல்லாம் மீறி 5451 மெகாவாட் மின்சாரத்தை வெளி சந்தையில் வாங்கும் மின்சார கொள்முதல் தரகராக மின்துறை அமைச்சர் தங்கமணி அவர்கள் விளங்குகின்றார்.

இந்த ஆண்டு கோடை காலத்தில் தமிழகத்தில் மின்சார தேவை 17,500 மெகாவாட் இருக்கும். இதை தமிழக மின் உற்பத்தி திறனை வைத்து எதிர் கொள்ள முடியும்.

தமிழகம் மின் மிகை மாநிலமாக உள்ளதால்,மின்வெட்டு இருக்காது என்று உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டு கொண்டுள்ளார்.

தமிழகத்தின் இந்த ஆண்டு கோடையில் மின்தேவை 17,500 மெகாவாட் தமிழகத்தின் நிரந்தர மின் உற்பத்தி ஆதாரமான அனல், எரிவாயு, மத்திய தொகுப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டால், 10988 மெகாவாட்டு தான் நிரந்தரமாக கிடைக்கும் ஆதாரமாகும் மீதம் உள்ள 6512 மெகாவாட் மின்சாரத்தை ஜீமூம்பா போட்டு மின்சார உற்பத்தியை உயர்த்த உள்ளாரா அல்லது தொழிலாளர்களின் உதிரத்தால் உழைத்து உருவாக்கிய மின்வாரிய நிதியை மின்சார சந்தையில் மசான கொள்ளை விட போகின்றாரா என்பது தான் நம்முன் உள்ள கேள்வி.

சென்ற ஆண்டு மின் பற்றாக்குறை எதிர்கொள்ள மின்சார கொள்முதல் அதாவது 5451 மெகாவாட் மின்சாரம் வாங்க செலவழித்த தொகை 41,000 கோடியாகும். அந்த ஆண்டில் மொத்த வருமானமே 46,000 கோடி,

இந்த ஆண்டு சுமார் தோராய கணக்கின் அடிப்படையில் பார்க்கும் போது சுமார் 6512 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய வேண்டி உள்ளதால் சென்ற ஆண்டு கொள்முதலுக்காக செலவழித்த தொகையைவிட அதாவது ரூ.41,000 கோடியை விட கண்டிப்பாக கூடுதலாக செலவு செய்தால் தான் மின் தேவையை எதிர்கொள்ள முடியும்.

கடந்த 10 ஆண்டு காலமாக மின் தேவையை எதிர்கொண்ட வரலாற்றை பார்ப்பாமேயானால் 2013-2014 ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தி 30,543 மில்லியன் யூனிட் கொள்முதல் செய்ததோ 58517 மில்லியன் யூனிட் 2016-2017 ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தி 29, 079 மில்லியன் யூனிட் கொள்முதல் செய்ததோ 76,505 மில்லியன் யூனிட் 2017-2018 ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தி 27893 மில்லியன் யூனிட் கொள்முதல் செய்ததோ 78,954 மில்லியன் யூனிட் இந்த புள்ளி விவரங்களை பார்க்கும் போது தேவையான மின் நிலையங்களை அமைத்து மின் உற்பத்தி செய்து மின் தேவையை எதிர் கொள்வதைவிட அதீத விலையில் மின்சாரத்தை கொள்முதல் செய்து மின்சார நிதி கஜானாவை காலி செய்யும் மின் கொள் முதல் செய்யும் தரகு வியாபாரியாகவே மின்துறை அமைச்சர் தங்கமணி விளங்குகிறார். மாண்புமிகு தங்கமணி அவர்களை எரிசக்தி துறை அமைச்சர் என்று சொல்வதை விட மின்சார தரகு வியாபாரி என்று சொல்வதே சால பொருத்தம் ஆகும்.

மேலும் நிதி நிலை அறிக்கையில் மின் வாரியத்தின் நிதி நெருக்கடியை எதிர்கொள்வதற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது. நிதி நெருக்கடியே அரசின் கொள்கையால் தலையீட்டால் ஏற்படுகின்றதே தவிர மற்ற வகையில் அல்ல என்பதை குறிப்பிட வேண்டி உள்ளது. அதாவது அரசு மின் நுகர்வோருக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் அதீத விலையில் சுயநல எதிர்பார்ப்போடு மின்சார கொள்முதல் செய்வது, மின் நுகர்வோர்களுக்கு மானிய விலையில் மின்சாரம் அளிப்பது, தளவாட சாமான்கள் கொள்முதல் வீணான தலையீட்டை செய்து நிதி இழப்பை ஏற்படுத்துவது, மின் உற்பத்தி நிலையங்களில் கட்டுமான பணிகள் அமைப்பதில் வீணான தலையீட்டை செய்து நிதி இழப்பை ஏற்படுத்துவது, மின் உற்பத்தி நிலையங்கள் கட்டுமான பணிகள் அளிப்பதில் வீணான தலையீடு, மின் நிலையங்கள் அமைப்பதை குறிப்பிட்ட காலத்தில் முடிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் அளிக்காது. மின்சாரம் பறி மாற்றம் செய்யும் போது

வாரியத்திற்கு வரவேண்டிய வருவாயை வசூலிப்பதில் வீணான தலையீடு போன்றவைகளால் ஏற்படும் இழப்பீட்டை அரசு தான் ஈடுசெய்ய வேண்டும். அதை முழுமையாக ஈடு செய்யவில்லை என்பது தான் அரசின் மீது எழும் குற்றசாட்டாகும்,ஆனால் நிதி நிலை அறிக்கையில் மாறாக மின் வாரியத்திற்கு ஏற்படும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் பணியை இந்த நிதி அறிக்கையில் செய்துள்ளோம் என்று குறிப்பிடுவது உகந்தது அல்ல.

நிதி நிலை அறிக்கையில் மின்வாரியத்திற்கு 20,115.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மின்வாரியத்திற்கு நிதி நிலை அறிக்கையில் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்து உள்ளதாகவும், அதற்கு நில பின்னனி உள்ளதாகவும் சில செய்திகள் கசிந்து உள்ளன. ஆனால் மின்சாரம் ஒரு தாய் நிறுவனம், அது அசைந்தால் மாநிலமே அசையும், அதுமட்டுமல்லாமல் மின்சாரத்துறை ஒரு சேவைத்துறையாகும். அதை மனதில் கொண்டு ஆளும் அரசுகள் பல சலுகைகளை, மானியங்கள், போன்றவற்றை அறிவிக்கின்றன. அந்த அறிவிப்புகளை நிறைவேற்ற வேண்டுமானால் அரசு இந்த அறிக்கையில் ஒதுக்கீடு செய்தது என்பது யானை பசிக்கு சோளப்பொறி போடுவது போல் தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவிர மற்றவர்கள் கூறுவதைப் போல கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவில்லை என்பது எதார்த்த நிலை.

மேலும் மத்திய அரசு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் போது மாநிலங்களில் சுற்று சூழலை பாதிக்கும் வகையில் உள்ள அனல் மின் நிலையங்கள் மூடப்படும் என்று அறிவித்து மூடப்பட உள்ள அனல் மின் நிலையங்களின் பட்டியலையும் வெளியிட்டுள்ளார். அந்த பட்டியலில் தமிழகத்தில் மேட்டூர் அனல் மின் நிலையம் அலகு -1, 840 மெகாவாட் தூத்துக்குடி அனல் நிலையம் 1050 மெகாவாட், வடசென்னை அனல் மின் நிலையம் 630 மெகாவாட், நெய்வேலி அனல் மின் நிலையத்தில் சில அலகுகள், மின் நிலையத்தில் சில அலகுகள், அதாவது தமிழ்நாடு மின்சார வாரியம் நேரிடையாக மின் உற்பத்தியில் ஈடுபடும் அதாவது 2510 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையங்களை 2022 இல் மூடும் பட்டியலில் உள்ளது. என்பதை பார்க்கும் போது தமிழகத்தில் அனல் மின் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு 1810 மெகாவாட்டாக சுருங்கும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை மின் நுகர்வோர்களும், மின்வாரிய ஊழியர்களும் உணர்ந்து மாற்று மின் உற்பத்தி ஏற்பாட்டுக்கு தமிழக அரசை நிர்பந்திக்க வேண்டி உள்ளது.

**எஸ்.எஸ்.எஸ்**

## பாமாயில் தடையிலும் அதானிக்கே ஆதாயம்

காஷ்மீரில் சிறப்பு அந்தஸ்தை நீக்கியது மற்றும் குடியுரிமை திருத்தச் சட்டம் ஆகியவற்றை மலேசிய நாட்டின் பிரதமர் மகாதீர் முகமது விமர்சித்திருந்தார். இதனால் கோபம் அடைந்த மோடி, மலேசிய பிரதமர் இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடுகிறார் எனக்கூறி மலேசியா பாமாயில் இறக்குமதிக்கு மறைமுக தடை விதித்தார்.

ஆனால் மலேசிய பாமாயிலுக்கு விதித்த தடை மலேசியா பிரதமர் பேசியதற்காக அல்ல அது மோடியின் கார்ப்பரேட் முதலாளிக்காக எனத் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் சமையல் எண்ணெய்க்காண தேவையில் 45 சதவீதம் மலேசிய பாமாயில் தான் பூர்த்தி செய்யப்படுகிறது. இந்த 45 சதவீதத்தை ஈடுகட்ட இந்தியாவில் உள்ள நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆக எவ்வளவு நல்ல செயல் என நீங்கள் நினைக்கலாம் . ஆனால் அந்த நிறுவனங்கள் யார் என்று தெரியுமா அதானியின் வில்மர் நிறுவனம் 'பார்ச்சூன்' (Fortune) என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறது. இன்னொரு பெரிய நிறுவனம் 'ருச்சி சோயா' இது நுட்ரெல்லா, மகா கோஷ், சன்ரிச், ருச்சி கோல்டு, ருச்சி ஸ்டார் ஆகிய பிராண்டுகளில் சமையல் எண்ணெய் விற்று வருகிறது.

இந்த நிறுவனத்தை அண்மையில் தான் ராம்தேவ்-வின் பதஞ்சலி வாங்கியது.

அதானியும், ராம்தேவ்வும் முழுக்க முழுக்க இந்தியாவில் சமையல் எண்ணெய்யை உற்பத்தி செய்து விநியோகிக்கப் போவதில்லை. இவர்களும் மலேசியாவிலிருந்து பாமாயிலை வாங்க தான் போகிறார்கள். அதெப்படி தடை உள்ளதே? எனக்கேள்வி எழலாம். தடை சுத்தரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்க்கு தான். சுத்திகரிக்கப்படாத கச்சா பாமாயில் இறக்குமதி செயய தடையில்லை. எனவே இந்த இரு பெரும் முதலைகளும் மலேசியா பாமாயிலை இறக்குமதி செய்து விற்கப் போகிறார்கள்.

மோடி எதைச் செய்தாலும் லாபம் அதானிக்கு தான்!




ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு வாரியமே தினக்கூலி ரூ.380/- வழங்கிட

# மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் உண்ணாவிரதம்.

தமிழக மின்வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்களின் பங்கு மகத்தானது. வாரியத்தின் வளர்ச்சியில் பெரும்பணியாற்றியவர்கள் இந்த ஒப்பந்த ஊழியர்கள். ஆண்டுகள் பல கடந்தும் வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டே இருக்கும் ஆட்சியாளர்கள்.

வயது 40,45 யை கடந்த காரணத்தால் கேங்மேன் பதவிக்கும் போட்டி போட முடியவில்லை. இந்த பணியை விட்டால் வேறு வேலைக்கும் போக முடியாது.

அனல் மின் நிலையத்தில் வேலை செய்யும் தொழிலாளி, கரிப்புகையிலும், சாம்பலிலும், அனல் வெப்பத்திலும் தன் வாழ்க்கையை பெரும் பகுதி தொலைத்து விட்டான். அவனது கனவுகள் எல்லாம் சாம்பலாய் போய்விடுமோ என்ற கவலையில் பணி செய்து கொண்டிருக்கிறான்.

புனல் மின் நிலையத்தில் பணியாற்றும் தொழிலாளியின் நிலையே மிகக்கொடுமை, மனிதர்களை சந்திப்பதே அரிது.வன விலங்குகளுக்கு மத்தியில், மலை முகடுகளில் வேலை செய்து கொண்டு இருக்கிறான். நிரந்தரம் ஆவோம் என்ற கனவுகளோடு விநியோக வட்டத்தில் வேலை செய்யும் ஒப்பந்த ஊழியரோ கம்பம் நட்டு, கம்பி இழுத்து, மின்மாற்றி அமைத்து ஊருக்கெல்லாம் ஒளி கொடுத்து தன் வாழ்க்கையின் வெளிச்சத்தை இருளில் தேட வைத்துள்ளது. தமிழக அரசும் வாரியமும்.

குழந்தைகளின் கல்வி, தாய்,தந்தையரை பராமரிப்பது, சமுதாயத்தில் ஒரு சாமானியன்களாக வாழ்க்கை நடத்த, கரணம் தப்பினால் மரணம்! என்ற சூழலில் கம்பத்தில் ஏறி வேலை செய்து கொண்டிருக்கிறான் இந்த தொழிலாளி!

இன்றைக்கு இருக்கும் புறச்சூழலில் பல இளம் தோழர்கள், வேலை கிடைக்காத காரணத்தால் கம்பியாளருடன் சென்று அவருக்கு உதவியாக வேலை செய்யும் அவலை நிலை. ஏனெனில் பிரிவு அலுவலகத்தில் கம்பியாளர் பதவி களஉதவியாளர் பதவிகள் முழுவதும் காலி, ஒரு கம்பியாளர் மின் தடையை சரிசெய்ய சராசரியாக ஒரு நாளைக்கு 10 கம்பத்தினால் ஏறினாலே சோர்வு அடைவான். நமது வாழ்க்கை முறையும் மாறி விட்டது. பல இடங்களில் இந்த ஒப்பந்த ஊழியர்களின் உதவி இல்லையென்றால் மின் நுகர்வோருக்கு, மின்சாரமே கிடைப்பதில் காலதாமதமாகும்.

மின் ஊழியர் மத்திய அமைப்பு, தனது போராட்டத்தில் சிதறிக்கிடந்த இந்த தொழிலாளர்களை திரட்டி தொடர்ந்து போராடி வருகிறது. 10.08.2007 ஒப்பந்தத்தின்படி அன்றைக்கு வேலை செய்த 21600 ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் செய்த பின்பு இன்று வரை ஏறத்தாழ 10 ஆண்டுகள் கடந்த பின்பு எவ்வித அசைவும் ஏற்படவில்லை.

26.12.2016,27.12.2017 ஆகிய நாட்களில் நடந்த இரு பிரம்மாண்டமான இயக்கங்களை நடத்திய பின்பு விரைவில் அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்ன வாரியம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சென்னை வெள்ளம், மற்றும் வர்தா, தானே, ஒக்கி, கஜா என அனைத்து இயற்கை பேரிடர் காலத்தில் சிறப்பாக பணியாற்றி தமிழக நுகர்வோர்களே பாராட்டும் அளவுக்கும் அதோடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், மின்துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், திரைப்பட நடிகர்கள் அரசியல்

பிரமுகர்கள் என அனைவரின் பாராட்டை பெற்றவர்கள் இந்த ஒப்பந்த தொழிலாளர்கள்.

இயற்கை பேரிடர் காலத்தில் வேலை செய்யும் இடத்திற்கு சென்ற மின்துறை அமைச்சர் விரைவில் நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் உற்சாகமாக வேலை செய்யுங்கள் என்று பசப்பு வார்த்தையை கூறி வேலை முடிந்தவுடன் கையை கழவுவதைப் போல கழவி விட்டார்.

இந்த தோழர்களை நிரந்தரம் செய்ய பல கட்ட போராட்டங்களை நடத்தினோம். ஆனால் அவர்கள் மத்தியில் நம்மீது நம்பிக்கை வர வேண்டும் என்பதற்காக மின்வாரிய தலைமையகம் முன்பு பிப்ரவரி -18-ல் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் உண்ணாவிரத போராட்டம் நடத்துவது என்ற முடிவுக்கு ஏற்ப பிப்-18-ல் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. உண்ணாவிரத போராட்டத்திற்கு மாநிலத்தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் தலைமை தாங்கினார். உண்ணாவிரத போராட்டத்தை சிஐடியுவின் தமிழ்மாநில பொதுச்செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் அவர்கள் துவக்கி வைத்தார். மத்திய அமைப்பின் மண்டலச் செயலாளர்கள் தோழர்கள் வி. மதுசூதனன், சி.ஜோதிமணி, ஆர்.ரவிக்குமார், ஆர்.சிவராஜ், எம்.பீர்முகமதுஷா, எஸ். உமாநாத், எஸ்.அகஸ்டின், எம்.கோவிந்தராஜ், எ.முருகானந்தம் மற்றும் தோழர்கள் எம். தனலட்சுமி, எஸ்.ரங்கராஜ், எஸ். அப்பாதுரை, செயற்குழு உறுப்பினர் தோழர் முத்து, பொறியாளர் அமைப்பின் தலைவர் தோழர் ஜீவானந்தம், மாநில துணைத்தலைவர் எம்.சாலட் மற்றும் தோழர் விஜயலட்சும், சிஐடியு மாநிலக்குழு உறுப்பினர் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள்.

இதனை அடுத்து மத்திய அமைப்பின் துணைத் பொதுச்செயலாளர்கள் தோழர்கள் கே.ரவிச்சந்திரன், டி.பழனிவேலு, கே. அருட்செல்வன், மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன், மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் ஆகியோர் பேசினார்கள்.

ஒப்பந்த தொழிலாளர் கோரிக்கையோடு இன்றைய அரசியல் சூழ்நிலையில் தொழிலாளர்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் குறித்து சிஐடியுவின் மாநிலத்தலைவர் தோழர் அ.சவுந்தரராசன், முன்னாள் எம்.எல்.ஏ, அவர்கள் வாழ்த்துரை வழங்கி பேசினார்.

நிறைவாக மாலை 5 மணிக்கு உண்ணாவிரத போராட்டத்தை நிறைவு செய்து மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் நிறைவுரையாற்றி முடித்து வைத்தார்.

தோழர் காங்கேயன், மாநில செயலாளர் நன்றி கூறினார். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 33 மாநில நிர்வாகிகளும் 56 மாநில செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நாம் திட்டமிட்டமாறு அனைத்து மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு காலையிலும், பல்வேறு இடங்களில் மாலையிலும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மின்வாரியம் இந்த ஒப்பந்த ஊழியர்கள் சம்மந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் **எதிர்வரும் ஏப்ரல் 21-ந் தேதியிலிருந்து அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஒப்பந்த ஊழியர்களை திரட்டி காத்திருப்பு போராட்டம் நடத்துவது என அறை கூவல் விடுக்கப்பட்டுள்ளது.**

இந்த இயக்கத்தை வெற்றிபெறச் செய்ய ஒப்பந்த ஊழியர்களை திரட்டுவோம். அவர்களுக்கு ஆதரவாக ஒப்பந்த ஊழியர்களிலிருந்து நிரந்தரமான தோழர்களையும் திரட்டுவோம். போராடுவோம்! வல்லமை பெறுவோம்!

## வாழ்த்துக்கள்



தோழர் **டி. பழனிச்சாமி,** JA., கோட்டசெயலாளர் கோவை தெற்கு அவர்களின் பெற்றோரின் பீமரத சாந்தி (70 ஆம் ஆண்டு திருமண விழா) 08.03.2020 அன்று சிறப்பாக நடைபெற்ற போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/- அளித்தார். வாழ்த்துக்கள்.

# பணப்பயன்கள் வழங்க காலதாமதம் ஏன்?



தமிழக மின்வாரியத்தின் ஆண்டு வருமானம் ரூ.60,700/- கோடி, இதில் ஊழியர்கள், நலன், நிர்வாக செலவு மற்றும் மின் சாதனங்கள் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் என்ற வகையில் வாரிய கணக்குப்படி தோராயமான செலவு ரூ.9740/- கோடி இதில் மாத சம்பளத்திற்காக செலவிடும் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.4,200/- கோடி வாரியத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட தொழி லாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கு ஓய்வூதியம் என்ற வகையில் ரூ.3360/- கோடி, ஆக மொத்தம் மொத்த வருவாயில் ஊழியர்கள் நலன், பென்சன், ஊதியம், பராமரிப்பு லெவு என்ற வகையில் 16.04 சதவீத மட்டுமே வருவாயில் செலவு செய்யப் படுகிறது. 80 சதவீதம் மின்சாரத்தை வாங்குவதற்கும், புதிய மின் நிலையங்களை அமைப்பதற்கும் இந்த அரசு செலவு செய்கிறது. உதாரணத்திற்கு 2018-19 ஆண்டில் மின்சாரத்தை விற்ற வகையில் வாரியத்திற்கான வருமானம் ரூ.46046.23/- கோடி. ஆனால் தனியாரிடம் இருந்து நீண்டகாலம் ஒப்பந்தத்தின் மூலம் மின்சாரத்தை வாங்கியது ரூ.41,003.40/- கோடி. இதே நேரத்தில் மின்வாரியத்தில் 42,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளது.

மேற்கண்ட 42,000 காலிப் பணி இடங்களை, இருக் கின்ற பணியாளர்கள் கூடுதல் பணிச் சுமையை சுமந்து வேலை செய்து வருகிறார்கள். மின்சார வாரியத்தில் கடந்த ஓராண்டாக கடும் நிதி நெருக்கடியில் வாரியம் சிக்கி உள்ளது. ஊழியர்களின் சேமநிதி, விடுப்புச்சலுகை, பண்டி கை முன்பணம், இரட்டிப்பு ஊதியம், பயணச்சலுகை, கல்விக் கடன், வாகனக்கடன் போன்ற வகையில் உரியகாலத்தில் கிடைத்து வந்த பணத்தொகைகள் கிடைப் பதில்லை. இதனால் ஊழியர்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. மின் வாரியத்திற்கு ஏற்பட்ட நிதிச்சுமை பத்திரிக் கைகளில் வந்த வண்ணம் உள்ளதைக்கண்டு தொழிலாளர்கள் அச்சமடைந்து வருகின்றனர்.

ஏன் இந்த நிலை

வாரியத்தின் வருவாயை அறிந்து அதற்கேற்ப திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக வருவாய்க்கு மேல் செலவுகளை செய்து வரும் வாரியமாக உள்ளது.

1. நீண்டகால ஒப்பந்தத்தின் மூலம் மின்சாரத்தை அதிக நிலை கொடுத்து வாங்குவதால் கூடுதல் நிதிச்சுமை ஏற்படுகிறது.
2. புதிதாக துவங்கப்பட உள்ள உற்பத்தி திட்டங்களை விரைந்து முடிக்காமல் காலதாமதம் செய்வதன் மூலம் கடனுக்கு வட்டி செலுத்துவது அதிகமாகிறது.
3. உற்பத்தி திட்டங்களை துவக்குகின்ற போது அறிவிக்கப்பட்ட நிதிக்கும், அதே திட்டத்திற்கு மறு டென்டர் விடுகின்ற பொழுது கூடுதல் தொகை ஒதுக்கப்படுகிறது.
4. தரமற்ற பொருள்களை வாங்குவதன் மூலம் பொருட்கள் விரைவில் பழுதாவதுடன் பயன்பாடு இல்லாமல் போகிறது.
5. இலவசமாக வழங்கப்படும் மின்சாரத்திற்கான மானியத்தையும், அரசு நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி துறைகளிலிருந்து வரவேண்டிய மின் கட்டணத்தொகையையும் உரிய காலத்தில் பெறாமல் இருப்பது.
6. மின்வாரியத் திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும், நாம் பங்குதாரர்களாக உள்ள வல்லூர் அனல் மின் நிலையம் மற்றும், தூத்துக்குடியும், என்.எல்.சி, மின்சார வாரியமும் சேர்ந்து உற்பத்தி செய்யும் உற்பத்தி நிலையங் களிலிருந்து மின்சாரத்தை முழுமையாக பெறாமல் மின் உற்பத்தியை நிறுத்தி வைக்க வேண்டிய காரணத்தால் அதிக நஷ்டத்தை மின்வாரியம் சந்திக்கின்றது.

இந்த நட்டத்தை ஈடுசெய்வதற்கு தமிழக மின்வாரியமும், அரசும் உடனடியாக தனியாரிடம் அதிக விலை கொடுத்து வாங்கும் மின்சாரத்தை நிறுத்தி நமது மின் உற்பத்தி நிலையங்களை முழு வீச்சில் செயல்பட வைக்க வேண்டும்.

ஆனால் தனியாரிடம் மின்சாரத்தை வாங்கினால் தங்களுக்கு ஏதாவது வகையில் நன்மை கிடைக்கும் என்று கருதும் ஆட்சியாளர்களும் மின்வாரியத்தின் உயர் அலுவலர்களும் நினைக்கின்ற வரையில் இந்த நிலை மாறாது. இதனால் பாதிக்கப்படுவது உடனடியாக மின்வாரிய ஊழியர்களே

ஊழியர்களின் சேமநல நிதியும், விடுப்புக்கால சலுகையும், இரட்டிப்பு ஊதியம், கல்விக்கடன், ஆகியவற்றிற்கு நிதி வழங்காமல் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு எவ்வித நிலுவையும் வைக்காமல் மாதந் தோறும் காசு கொடுத்து வருகிறது.

மின்வாரிய அதிகாரிகள் எவ்வித பொறுப்பும் இல்லாமல் பொறுப்பை தட்டிக்கழித்து வருகின்றனர். கடந்த 2019 ஜூலை மாதத்திலிருந்து சேம நலநிதி, சரண்டர் இரட்டிப்பு ஊதியம், பயணப்படி, கல்விக்கடன் வழங்காமல் இழுத்தடிப்பு செய்யப் படுகிறது.

இனியும் இந்தச்சூழலை அனுமதிக்க முடியாது என்ற கோபம் தொழிலாளி வர்க்கத்திற்கு எழுந்துள்ளது. மார்ச் 2020-க்குள் அனைத்து நிலுவைத் தொகைகளையும் ஊழியர்களுக்கு சேருகின்ற வகையில் வழங்கப் படவில்லையெனில் ஒரு வலுவான சக்திமிக்க போராட்டத்திற்கு செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம். இந்த போராட்டங்கள் நாம் விரும்பியவை அல்ல! நம்மீது திணிக்கப்பட்டவை!

**எஸ்.இராஜேந்திரன்**

# ட்ரம்ப் வருகையால் யாருக்கு லாபம்?

அமெரிக்க அதிபர் டொனல்டுடிரம்ப் தனது குடும்பத்துடன் இந்தியாவிற்கு 2020, பிப்ரவரி 24-ம் நாள் வருகை தந்தார்.

பிரதமர் மோடியை டெனால் ட்ரம்ப் ஒவ்வொரு கூட்டத்திலும் புகழ்ந்து தள்ளி விட்டார். அமெரிக்காவின் மிக முக்கியமான இராணுவ கூட்டாளியாக இந்தியா இருக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார். 300 கோடி டாலர் மதிப்பிலான இராணுவ ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகின்றன என்றும் தனிச்சிறப்பு வாய்ந்த ஹெலிகாப்பட்டர்கள் இந்திய இராணுவத்திற்கு அமெரிக்கா விற்க உள்ளதாகவும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தெரிய வருகிறது.



மோடி அமெரிக்கா சென்ற பொழுது How Do Modi என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆனால் Go Back Modi என்று சொன்னதை ஊடகங்களால் காண்பிக்கப்படவில்லை.

அதே நிகழ்ச்சியைப் போல் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் டிரம்ப்பை வரவேற்கும் விதமாக நமஸ்தே டிரம்ப் என்ற நிகழ்ச்சி ஒன்றறை லட்சம் மக்களை கட்டாமாக காட்டி மோடி நடத்திக்காட்டி விட்டார்.

டிரம்ப் குஜராத்திற்கு வரும் வழியில் பாவப்பட்ட மக்களின் குடிசைகள் அமெரிக்கா அதிபரின் கண்களுக்கு தென்படக் கூடாது என ரூ.120 கோடியில் சாலை ஓரமாக பல கிலோ மீட்டருக்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. இந்த ரூ.120/- கோடியில் குஜராத் அரசு நினைத்திருந்தால் குஜராத்தின் மக்களுக்கு வீடுகட்டிக் கொடுத்திருக்கலாம்.ஆனால் மோடியை திருப்திபடுத்துவதற்காகவும் டிரம்ப்ன் கண்களுக்க ஏழை மக்களின் குடிசை கண்ணில் படாமல் இருப்பதற்காகவும் ஒரு சில மணி நேரங்களுக்கு மக்கள் வரிப்பணம் அநியாயமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவுடன் ஏற்கனவே பாதுகாப்பு துறையைச் சார்ந்த ஒப்பந்தங்கள் இருந்தும் தற்பொழுது வாங்கும் தளவாட சாமான்களுக்கு நாம் பணம் கொடுக்கப் போகிறோம். இதனால் அமெரிக்காவின் பொருளாதாரம் உயரும்.

என டிரம்பின் வருகையால் இந்தியாவிற்கு எந்த பயனுமே இல்லை. மாறாக அமெரிக்காவின் பொருளாதாரமே உயரும்.

# LIC- யில்




# அரசின் பங்கு விலக்கலை ஏன் எதிர்க்க வேண்டும்?

1956க்கு முன்னர் இந்தியாவில் இயங்கிய காப்பீட்டு நிறுவனங்கள், மக்களின் பணத்தினை தங்களது சொந்த தொழில்களுக்கு பயன்படுத்தி கொண்டு, லாபம் வந்தால் தாங்கள் எடுத்துக் கொண்டும், நட்டம் வந்தால் மக்கள் தலையில் சுமத்தியும் காப்பீட்டுதாரர்களை ஏமாற்றி கொண்டிருந்தனர். மேலும் நாட்டின் வளர்ச்சிக்கு அவர்கள் சிறு துரும்பை கூட கிள்ளி போடவில்லை. மக்களின் சேமிப்பினை பாதுகாத்திடவும் அதே நேரத்தில் அந்த பணம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உபயோகப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் 1956 செப்டம்பர் 1 ஆம் தேதியில் இந்தியாவில் இயங்கி வந்த 245 காப்பீட்டு நிறுவனங்களையும் தேசியமயமாக்கி, எல்.ஐ.சி என்ற மாபெரும் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் பிரதமர் நேரு காலத்தில் உருவாக்கப்பட்டது.

எல்.ஐ.சி ஒரு அரசு பொதுத்துறை நிறுவனம், எனவே எல்.ஐ.சி-யில் எடுக்கப்பட்ட பாலிசிகள் முதிர்ச்சி அடையும் போதோ அல்லது இறப்பின் மீதான உரிமம் தொகை கோரும் போதோ, நிச்சயம் பணம் கையில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் எல்.ஐ.சி-யில் காப்பீடுகளாக எடுத்திருக்கிறார்கள். தற்போது எல்.ஐ.சி-யின் சொத்து மதிப்பு என்பது 32 லட்சம் கோடிக்கும் அதிகமாக உள்ளது என்றால், அது இரண்டு அல்லது மூன்ற தலைமுறையாக நாமெல்லாம் எல்.ஐ.சி-யில் எடுத்த காப்பீட்டின் மூலமாக உருவானது.

நாட்டில் சந்தை தள்ளாடும் போதெல்லாம் மைய அரசுகள் எல்.ஐ.சி-யில் இருந்து பணத்தை வாங்கி நாட்டின் பொருளாதார நிலைமையை சீராக்கியிருக்கின்றன. மற்ற பொதுத்துறை நிறுவனங்களை காட்டிலும் எல்.ஐ.சி நிறுவனம் தொடர்ந்து லாபம் ஈட்டிக் கொண்டிருக்கிறது. தற்போதைய நிலையில் இந்தியாவில் அரசு உத்திரவாதத்துடன் கூடிய பாதுகாப்பான முதலீடு என்றால் அது எல்.ஐ.சி தவிர வேறு எதுவும் இல்லை.

ஆனால் எல்.ஐ.சியிலுள்ள மத்திய அரசின் பங்கில் ஒரு பகுதியை பொது வெளியீடு மூலம் விற்கப் போகிறோம் என்று நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனின் பொறுப்பற்ற பாராளுமன்ற பட்ஜெட் அறிவிப்பினால், மக்களிடையே மிகப் பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சுமார் 40 கோடி பாலிசிதாரர்களுக்குச் சொந்தமான ரூ. 32 லட்சம் கோடி நிதியைப் பாதுகாப்பாகப் பராமரித்தும், வேலை நாட்களில் ஒவ்வொரு நொடியிலும் ரூ. 2.72 லட்சத்தைப் பாலிசிதாரர்களுக்குத் திருப்பித் தந்து கொண்டிருக்கிற ஒரு மாபெரும் பொதுத்துறை நிறுவனம் தனியார் மயமாகிறது என்ற அறிவிப்பினால் மக்களும். தொழிற் சங்கங்களும் வெகுண்டெழுந்து போராடுகின்றனர்.

இப்படிப்பட்ட தொடர்ந்து அதிகப்படியான லாபம் ஈட்டும் நிறுவனத்தை மதிப்பீடு செய்வது கூட கடினம். ஒரு பொது நிறுவனத்தின் பங்கை பட்டியலிட வேண்டுமென்றால் அதன் 35 சதவீத பங்குகளை விற்பனைக்கு அளிக்க முயற்சி செய்கிறது. மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் பெரு முதலாளிகள் இந்தியாவில் முதலீடு செய்ய பெரிதும் தயக்கம் காட்டுகின்றனர். இதைவிட பெரிய ஊழல் எதுவும் இருக்க முடியாது.

எல்.ஐ.சி-யின் பங்குகளை விற்கப் போவதாக

கூறும் நிதி அமைச்சரின் அறிவிப்பு என்பது பல்லாயிரக்கணக்கான பாலிசிதாரர்களின் வாழ்க்கை நிலைமை ஆபத்தில் தள்ளியுள்ளது.

காப்பீடு செய்துள்ள 30 கோடி தனி பாலிசிதாரர்களும், 12 கோடி குழு பாலிசிதாரர்களும் நிதியமைச்சரின் அறிவிப்பு வந்தவுடன் சமூக ஊடகங்களில் அவர்களின் பதற்றமும், ஆத்திரத்தோடு நாம் வாழ்நாள் சேமிப்பை காப்பீடு மற்றும் பென்ஷன் பாலிசிகளில் முதலீடு செய்தவர்கள் தங்களது பணம் என்னவாகும் என்று திகைத்து நிற்கின்றனர்.

11வது ஐந்தாண்டு (2012-2017) திட்டத்திற்கு எல்.ஐ.சி-யின் பங்களிப்பு ரூ. 14,23,055 கோடிகள், அதாவது ஆண்டிற்கு சராசரியாக ரூ. 2,84,000 கோடிகள் தற்போதைய 12வது ஐந்தாண்டு (2017-22) திட்டத்தின் முதல் 2 ஆண்டுகளில் மட்டும் அரசுக்கு எல்.ஐ.சி வழங்கியுள்ள தொகை மட்டும் ரூ. 7,01,483 கோடிகள். ஆண்டிற்கு சராசரியாக ரூ. 3,50,000 கோடிகள் என பட்டியல் நீளும்.

**1956ல் அரசின் 5 கோடி மூலதனத்தோடு எல்.ஐ.சி துவங்கப்பட்டு தற்போதைய சொத்து மதிப்பு 32 லட்சம் கோடி ஆகும். இதுவரையில் மூலதன தேவைகளுக்காக அரசிடம் கையேந்திய வரலாறு இல்லை. 2018-19ல் மட்டும் அரசுக்கு மட்டும் டிவிடெண்ட் தொகையாக ரூ. 2,611 கோடி தந்துள்ளது. பாலிதாரர்களுக்கு மட்டும் 49,604 கோடி போனசாக வழங்கிய பெருமை LIC -க்கு உண்டு**

★ எல்.ஐ.சியில் அரசின் ஒரு பங்குகளை மட்டுமே விற்கின்ற போது நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்ற கேள்வி நம்மில் பலரிடம் உள்ளது. அரசின் நோக்கம் என்பது பொதுத்துறை பங்குகள் விற்கப்பட்ட போதெல்லாம் நஷ்டம், நிர்வாகத் திறமையின்மை, மக்கள் வரிப்பணம்பாழ் போன்ற காரணங்கள் சொன்னாலும் இந்த காரணங்கள் அனைத்தும் LIC -யின் பங்கு விலக்கலுக்கு முற்றிலும் பொருந்தாது மத்திய அரசு எந்தவித நியாயமும் இன்றி, பங்குச் சந்தையில் விற்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பது ஊழியர்கள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி எற்பட்டுள்ளது.

★ அரசு வங்கிகளில் கூட ஒரு பங்கு விற்பனை நடந்திருந்தாலும் அவை அரசின் கைகளை விட்டு போனது இல்லை. போகாமல் இருக்க காரணம் தொழிற் சங்கங்களின் தொடர் போராட்டம் தான்.

★ எல்.ஐ.சி. துவங்கிய பிறகு 23 தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் வந்தாலும் கடந்த நிதியாண்டில் மட்டும் எல்.ஐ.சியில் மட்டும் புதிய பாலிசிகளில் டிசம்பர் வரையில் 76 சதவீத பங்கோடு 40 கோடி பாலிசிகள் தன் கைவசம் வைத்துள்ளது.

★ எல்.ஐ.சி. பங்கு விலக்களுக்கு முக்கியமான காரணம் படிப்படையாக பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி-யை பார்ப்பரேட்டுகளுக்கு மடைமாற்றி விடுவதோடு பொருளாதார நெக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள அரசின் நிலையை சரிசெய்து கொள்வதுமாகும். இதுவரை 5 ஆண்டு திட்டங்களுக்கு லட்சக்கணக்கான கோடிகள் வாரிய வழங்கி உள்ளது. குறிப்பாக தற்போதை 13வது ஐந்தாண்டு திட்டத்திற்க இதுவரை வழங்கியுள்ள தொகை மட்டுமே 28,01,483 கோடி ரூபாய் ஆகும்.

★ இந்திய ஆயுள் காப்பீட்டு துறையில் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டு 21 ஆண்டுகள் கடந்த போதும், எல்.ஐ.சியுடன் 23 தனியார் நிறுவனங்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிலும் எல்.ஐ.சியின் பங்கு என்பது 74.71 சதவிதம், ஆனால் தனியார் நிறுவனங்களின் பங்கு என்பது 21 ஆண்டுகள் முயற்சித்தும் வெறும் 1.09 சதவீதம் மட்டுமே. காரணம் எல்.ஐ.சி-யின் மீது நாட்டு மக்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கை.

## அரசின் பங்கு விற்பனை முடிவால் ஏற்படும் அபாயங்கள்

தனியார் மயம் நோக்கி நகர்ந்தால் தனிநபர் எதிர்கால பாதுகாப்பு என்பது பூஜ்ஜியம் தான். க்ளையம் தருவதும், பாலிசி காலம் முடிவில் பாலிதாரர்களுக்கு வழங்கப்படும் போனஸ், மெச்சூரிட்டி ரிட்டர்ன்ஸ் தருவதில் தனியார் நிறுவனங்கள் வைப்பது தான் சட்டமாகும். பாலிதாரர்களின் பணத்திற்கு உத்ரவாதம் இல்லாமல் போக வாய்ப்புள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களின் தாக்கத்தால் எதிர் காலத்தில் நாட்டின் வளர்ச்சியில் தொய்வு ஏற்படும், கோடிக்கணக்கான மக்களின் பணத்தை திருடி கார்ப்பரேட்டுகள் கொழுக்க உதவும்.

மற்ற பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்கும் போதெல்லாம் மக்களுக்கு ஏற்படாத அதிர்ச்சியும், கோபமும் எல்.ஐ.சியின் பங்குகள் விற்கப்படும் போது ஒரு சாதாரண இந்திய குடிமகனின் வாழ்க்கையில் எல்.ஐ.சி எவ்வாறு பங்காற்றியுள்ளது என்பது புரியும். எனவே காப்பீட்டு துறை ஊழியர்கள் மட்டுமல்ல, பொது மக்களும் இந்த பங்கு விற்பனை முடிவினை எதிர்க்கிறார்கள். எல்.ஐ.சி என்பது மக்களின் சொத்து மட்டுமல்ல, இந்தியாவின் கௌரவம்.

-யெம்வீ

# உ ஆண்டுகளுக்கு முன்னால் அறிவித்த உ900 களஉதவியாளர் ( ITI ) பணி நியமனங்கள் என்னவாயிற்று ?

மின்வாரியத்தில் பல்லாயிரம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதை தொடர்ந்து நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததின் அடிப்படையிலும் நமது தொடர் போராட்டத்தின் மூலமாகவும் களஉதவியாளர் பணியிடங்களில் ITI பயின்றவர்களையும் எடுத்திட வேண்டும் என்று கோரி வந்தோம். அதனடிப்படையில் 2018-ல் 400 பேரும் 2018 இறுதியில் கூடுதலாக 500 பேரும் எடுப்பதாக வாரியம் உத்தரவை வழங்கியது. இந்த எண்ணிக்கை போதாது என்று நாம் கோரியதின் அடிப்படையில் 2019-ல் மின்துறை அமைச்சர் நமது வற்புறுத்தலின் காரணமாக மீண்டும் ஈரோடு மண்டலத்திற்கு 1000, கோவை மண்டலத்திற்கு 1000 என்று எண்ணிக்கையை உயர்த்தி மொத்தம் 2900 விரைந்து எடுக்கப்படும் என்று நாமக்கல் அருகில் உள்ள புதிய காவல் நிலையத்தை துவக்கிய நிகழ்ச்சியில் மின்துறை அமைச்சர் தங்கமணி அறிவித்தார். அறிவிப்பு அறிவிப்பாகவே இன்று வரை உள்ளது.

மின்வாரியத்தில் 25000-க்கும் மேற்பட்ட களஉதவியாளர்கள், கம்பியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளதால் அந்த பணியையும் ஏற்கனவே உள்ள களஉதவியாளர், கம்பியாளர்களே செய்வதால், விபத்தும், மன உளச்சலும் ஏற்படுகின்றது என்று நிர்வாகத்தை தொடர்ந்து வற்புறுத்தி வந்தோம். வாரியம் இதனை கவனத்தில் கொள்ளாமல் மார்ச் 2018-ல் புதியதாக கேங்மேன் பதவியை உருவாக்கி 5000 பேர் எடுக்கப்படுவார்கள் என்று அதிரடியாக அறிவித்தது. அறிவித்த அடுத்த நாளே அவசர அவசரமாக சர்வீஸ் ரெகுலேஷனில் திருத்தம் செய்யும் உத்தரவை வழங்கியது. தொழிற்சங்கங்களை ஆலோசனை செய்யாமல் பணி விதிகளில் திருத்தம் செய்தது தவறு என்று சுட்டிக்காட்டியும், அதன்மீது நீதி மன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளோம்.

மின்வாரியத்தில், ITI தொழிற்கல்வி பயின்றவர்களை எடுப்பதாக சொல்லி வாரிய ஆணையும் பிறப்பித்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்பும் எந்த நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்து சென்னை, திருச்சி, பெரம்பலூர், சேலம், வட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தது. இதில் நூற்றுக்கணக்கான இளம் ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தை ஒட்டி நடந்த பேச்சுவார்த்தையில் ITI களஉதவியாளர்கள் விரைவில் எடுப்பதாக உறுதியளித்தனர். மின் ஊழியர் மத்திய அமைப்பு ITI தொழிற்கல்வி பயின்றவர்களுக்கு தமிழகம் முழுவதும் இலவச பயிற்சி மையங்களை துவங்கி, சுமார் 2000 மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளோம். நமது மையங்களில் இன்றும் புதிய இளம் தோழர்கள் பதிவு செய்து வருகிறார்கள். நமது உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பார்த்து பலர் DYFI அமைப்பில் உறுப்பினராகி உள்ளனர். பலர் இப்போது CITU சங்கத்தில் சந்தா செலுத்தவும் தயாராக உள்ளனர். நாம் தான் மின்வாரியத்திற்கு உள்ளே வந்த பின்பு பெற்று கொள்வோம் என்று சொன்னோம்.

மின்வாரியம் ITI தொழிற்கல்வி பயின்றவர்களை எடுப்பதில் மீண்டும் தயக்கமோ, காலதாமதமோ செய்தால் மீண்டும் போராட்டகளத்திற்கு திட்டமிடுவோம். வாரியத்தின் வளர்ச்சியில் நாம் அதிக அக்கறையுடன் உள்ளோம். அதே போல வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் நலனில் அதிக அக்கறையுடன் உள்ளோம். இளைஞர்களே இந்தியாவின் எதிர்காலம் என்று மேடையில் மட்டும் முழுங்குபவர் அல்ல நாம். இளைஞர்களின் உணர்வோடு அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் ஆழமாக விவாதிப்பவர்கள் நாம். ITI படித்தவர்கள் மட்டுமல்ல TA, AE, JA, Assessor போன்ற அனைத்து பணியிடங்களையும் நிரப்பிட தொடர்ந்து போராடி வருகின்றோம்.

மின்வாரியம் மேலும் காலதாமதம் செய்யுமானால் மீண்டும் ITI படித்த இளைஞர்களை திரட்டி வாரிய தலைமை அலுவலகத்தின் முன்பாக வலுவான ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம்.

**- தி.ஜெயசங்கர்**



# வாருங்கள் சிறை நிரப்புவோம்! புதிய வரலாற்றை உருவாக்குவோம்!!

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையை கொளுத்துவோம்"*

*- புரட்சிக்கவி பாரதி-*

உலகம் முழுவதும் கொண்டாடப்படும் மார்ச்-8 சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம் நிச்சயமாக கொண்டாட்டத்தில் அல்ல போராட்டத்தில்தான் துவங்கியது. உழைக்கும் பெண்களின் கோரிக்கை களான 8 மணி நேர வேலை, சமவேலைக்கு சம கூலி, வாக்குரிமை கேட்டு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் அமெரிக்காவின் நியுயார்க் நகரில் 1908ம் ஆண்டு மார்ச்-8 அன்று ஒரு பேரணியை நடத்தினர்.

1910ம் ஆண்டு நடைபெற்ற உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் மார்ச்-8 தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக அனுசரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார் கிளாரா ஜெட்கின். அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்து கொண்டனர். பாலின பாகுபாட்டை எதிர்த்து உழைக்கும் பெண்கள் நடத்திய வேலை நிறுத்தங்கள், போராட்டங் களில்தான் சர்வதேச பெண்கள் தினத்தின் வரலாற்று வேர்கள் பதிந்துள்ளன.

1975ம் ஆண்டுதான் ஐ.நா மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினமாக முறைப்படி அறிவித்தது. அறிவித்த பிறகு கொண்டாடத் துவங்கிய முதல் சர்வதேச பெண்கள் தினத்தின் முழக்கமாக "சமத்துவத்தை யோசி, அறிவுப்பூர்வமாக கட்டி யெழுப்பு, மாற்றத்துக்காக புதுமையாக சிந்தி" என்ற முழக்கங்கள் முன்வைக்கப்பட்டது. இன்றும் அதே முழக்கம் வைக்கவேண்டிய நிலையே தொடர்கிறது.

போராட்டத்தில் துவங்கிய சர்வதேச பெண்கள் தினம் இன்று வணிகமயமாகிவிட்டது. அடக்கு முறைக்கு எதிராக போராடிய வீர வரலாறு சம்பிரதாயத்திற்காக சொல்லும் வகையில் மாறிவிட்டது. இடதுசாரி சிந்தனையுள்ள, சமூக அக்கறையுள்ள அமைப்புகள்தான் இதன் வரலாறு மாறாமல் இன்றும் அந்த வீர வரலாற்றை இளம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லி, பெண் தொழிலாளர்களின் உரிமைக்காகவும், சமூக மாற்றத்திற்காகவும், தியாகம் செய்த பெண் தொழிலாளர்களின் வீரமிக்க போராட்ட உணர்வை உணர்த்தும் நாளாக கடைபிடித்து வருகிறோம்.

சென்னையில் நடைபெற்ற சிஐடியு-வின் 16வது அகில இந்திய மாநாடு இந்த ஆண்டு மார்ச்-8 பெண்கள் தினத்தை பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறைக்கு கண்டனம் தெரிவித்தும், பெண்களின் உழைப்பை சுரண்டும் கொடுமைக்கு முடிவுகட்டும் விதத்தில் இந்தியா முழுவதும் சிறை நிரப்பும் போராட்டமாக நடத்த வேண்டும் என்று அறைகூவல் விடப்பட்டுள்ளது.

செய்தித்தாள்களில் தினம்-தினம் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், சாதி ஆணவக் கொலைகள், அமிலம் வீசுதல், கூட்டு பாலியல் கொடுமை, கொலை என்று வந்து கொண்டே இருக்கிறது. சிறு குழந்தைகள்கூட இத்தகைய தாக்குதல் களிலிருந்து தப்புவதில்லை, மத மற்றும் சாதிய மோதல்கள் என்று வந்து கொண்டே இருக்கிறது.

2017-ல் வெளியிடப்பட்டுள்ள தேசிய குற்றப்பிரிவு ஆணையத்தின் கணக்கின்படி ஒரு நாளைக்கு 93 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு

ஆளாக்கப்படுகிறார்கள். இதில் 3-ல்1 பகுதி சிறுமிகள் என்று கூறப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

பணியிடத்தில் பாலியல் வன்கொடுமை என்பது பெண்களின் மிகப்பெரிய பிரச்சனை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்பு ஏற்படுகிறது. இதை தடுக்கும் விதமாக 2013ம் ஆண்டு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் புகார் கமிட்டி அமைக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. பெண் ஊழியர்கள் 10-க்கு மேல் பணிபுரியும் அனைத்து இடங்களிலும் கமிட்டி கட்டாயம் அமைக்க வேண்டும் என்று உள்ளது. தமிழ்நாட்டில் பல அரசு நிறுவனங்களில்கூட குழுக்கள் அமைக்கப் படவில்லை.

அதேபோல் சமவேலைக்கு சமகூலி இன்றுவரை கிடைப்பதில்லை, மறுபக்கம் ஊதியமற்ற பெண் களின் உழைப்பு குடும்பத்தை பராமரித்திட பெண்கள் செலுத்திடும் உழைப்பு இந்திய நாட்டின் உற்பத்தி கணக்கீட்டில் இடம்பெறுவதில்லை.

தகவல் தொழிற்நுட்ப துறைகளில் ஈடுபடும் பெண்களின் வேலைநேரம், பணிப்பாதுகாப்பு ஆகியவை அரசால் முறைபடுத்தப்படவில்லை.

அங்கன்வாடி, ஆஷா, சத்துணவு உள்ளிட்ட திட்டப்பணியாளர்களை அங்கிகரித்து அரசு ஊழியராக்க வேண்டும் என்ற கோரிக்கையினை அரசு நிறைவேற்ற மறுக்கிறது.

ஜனநாயகத்தை அர்த்தமுள்ளதாக மாற்றிட முடிவெடுக்கும் அதிகாரம் உள்ள அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை உத்தரவாதப்படுத்த சட்ட மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் 33சதம் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப் படவில்லை.

முறைசாரா பெண் தொழிலாளர்களின் நலவாரிய முறைகேடுகளை தடுத்து, நலவரிய பலன்கள் தடையின்றி பெற்றிட நாம் தொடர்ந்து இயக்கம் நடத்தி வருகிறோம்.

அரசு நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில், பகுதிநேரமாக பணி செய்பவர்கள், தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கும் மகப்பேறு விடுப்பு என்பது உரிமையாக்கப் படவில்லை. மறுக்கப்பட்டே வருகிறது.

மால்களிலும், நவீன விற்பனை நிலையங்களிலும் உயிரற்ற பொம்மைகளுக்கு சமமாக பெண்களை நிறுத்தி, அமர்ந்து பணியாற்ற இருக்கை வசதிகள்கூட இல்லாத மோசமான சூழ்நிலையை, மனிதநேயமற்ற செயலை நாம் அரசின் கவனத்துக்கொண்டு சென்று உத்தரவாதப்படுத்த வேண்டியது முக்கிய கடமையாகும்.

பொதுத்துறை நிறுவனங்களான எல்.ஐ.சி, வங்கி, பி.எஸ்.என்.எல், பாதுகாப்புத்துறை, விமானப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, மின்சாரம் என்று தனியாருக்கு தாரைவாக்கும் அரசின் மக்கள் விரோத கொள்கையை எதிர்த்து போராட வேண்டிய கட்டாயத்திற்கு தொழிலாளி வர்க்கம் தள்ளப் பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஆண்டு மார்ச்-8 பெண்கள் தினத்தை பெண்களுக்கு எதிரான வன்முறையோடு, வர்க்கத்தின் ஒரு பகுதி பெண்கள் என்ற முறையில் ஆளும் வர்க்கத்தை எதிர்த்து போராட வேண்டியவர்கள் நாம்தான் என்பதை மனதில் நிறுத்தி களப்போராட்டமாக இவ்வாண்டு மார்ச்-6 அன்று சிறை நிரப்பும் போராட்டமாக அனைத்து மாவட்ட தலைநகரங் களிலும் திட்டமிடப்பட்டுள்ளது

பல ஆயிரம் பெண் தொழிலாளர்கள் கலந்து கொள்ள வேண்டும், சிஐடியு வரலாற்றில், உழைக்கும் பெண்கள் வரலாற்றில் திருப்பு முனையாக மாறவேண்டும்.

சம உரிமைக்காகவும், சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பெண்கள் குழந்தைகளை பாதுகாக்கவும் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தில் பெண் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்ள வேண்டும், சிறை நிரப்பும் போராட்டத்தை சக்தியாக, நடத்த வேண்டும்.


***வர்க்க போராளிகளே வருக!***

***வரலாறு படைக்க வருக!***

சிறை நிரப்ப வருக! வருக என சிஐடியு உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புகுழு அறைகூவல் விடுத்து அழைக்கிறது.

தஞ்சை தனலட்சுமி
**கன்வீனர்/ உழைக்கும் பெண்கள் ஒருங்கிணப்புக்குழு**





# பாஜகவின் குருகுலக்கல்வி ஏன்?

இந்துத்துவ அமைப்புகள் தற்போதைய கல்விமுறை ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்டது என்றும், இதனை நீக்கிவிட்டு மீண்டும் பழைய குருகுல முறைக் கல்வியை கொண்டு வர வேண்டுமென்றும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றன. தற்போது இவர்களின் கோரிக்கை செயல்வடிவம் பெறத்துவங்கியுள்ளது. குருகுலக் கல்விக்காக புதிய ஆணையம் உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சாமியார் ராம்தேவ் அமர வைக்கப்பட்டுள்ளார். ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு பார்ப்பனர் மட்டுமே கல்வி கற்கும் நிலை இருந்தது.

சூத்திரர்கள் உள்ளிட்டோர் அங்கு கல்வி கற்க அனுமதியில்லை. இதனால் பல நூற்றாண்டுகளாக இந்தியா இருண்ட காலத்தில் இருந்து வந்தது. 1700-களில் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருகை தந்த பிறகு சீரழிந்து கிடந்த சமூகத்தை கல்வியின் மூலம் மேம்படுத்த முயலும் நோக்கத்தில், மதத்தின் பரப்புரையின் மூலமாக மிசினரிப்பள்ளிகள் நாடு முழுவதும் ஆங்கிலேயர்களால் துவங்கப்பட்டன.

முக்கியமாக தென் இந்தியாவில் அதிகமாக துவங்கப்பட்டன. இதன் விளைவாக 1800-களுக்குப் பிறகு இந்தியாவின் எழுத்தறிவு 5 விழுக்காடாக உயர்ந்தது. இதனைத் தொடர்ந்து 1900-களின் துவக்கத்தில் 13 விழுக்காடாக கூடியது. பள்ளி மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தன. அதே நேரத்தில் மற்றொருபுறம் குருகுலக் கல்விமுறை சீந்துவார் யாருமின்றி கிடந்தது. இதனை அடுத்து பல குருகுலங்கள் ஆங்கிலேயக் கல்வி முறையை ஏற்றுக் கொண்ட காரணத்தால் குருகுலக்கல்வி முறை முடிவிற்கு வந்தது.

குருகுலக்கல்வி முறை முடிவிற்கு வந்த பிறகு தான் அனைவருக்குமான கல்வி என்பது சாத்தியமானது. இருப்பினும் குருகுலக்கல்வி என்ற பெயரில் பொதுக்கல்வியிலும் ஆங்காங்கே பாகுபாடுகளைக் காண முடிந்தது. தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வெளியே வந்ததில் முக்கிய காரணமாக இருந்தவற்றில் ஒன்று சேரன்மாதேவி குருகுலத்தில் நடந்த ஜாதியக் கண்ணோட்டம் தான். சுதந்திரத்திற்குப் பிறகு சில மடங்கள் குருகுலக்கல்வி என்ற பெயரில் ஆரம்பித்தனர்.

ஆனால் அங்கு வாழ்க்கை முன்னேற்றத் திற்கான கல்வியில்லாத நிலையில், பிராமனர்கள் கூட அதை ஆதரிக்கவில்லை, 1950களுக்குப் பிறகு மீண்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கல்வி நிறுவனங்களைத் திறந்து நடைமுறைக் கல்வியுடன் மெல்ல மெல்ல மதவாதத்யையும் திணித்து வந்தது. இந்து வித்யாலயா என்ற பெயரில் நாடு முழுவதும் அதன் கிளைகள் திறக்கப்பட்டன. இருப்பினும் பழைய குருகுலக்கல்வி முறைக்கு மக்களை இழுக்க முடியவில்லை.

இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு கல்வியில் சீர்திருத்தம் என்ற பெயரில் இந்துத்துவ அமைப்புகளின் ஆலோ சனைகளை ஏற்று கல்வி முறையில் வெகுஜன மக்களின் எதிர்ப்பிற்கும் இடையில் மெல்ல மெல்ல மதவாதத்தைத் திணித்து வந்தது. தற்போது நேரடியாக குருகுலக் கல்வி முறையை அறிமுகப்படுத்த மனித வளத்துறை ஆணையம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த ஆணையத்திற்குத் தலைவராக சாமியார் ராம்தேவை நியமித்து உள்ளனர். இவர் மீது வருமான வரித்துறையில் வழக்குகள் உள்ளன. இந்த ஆணையம் குருகுலக்கல்விக்கான பாடத்திட்டங்கள், தேர்வுகள், சான்றிதழ்கள் ஆகியவற்றைத் தயார் செய்து வருகிறது.

வேதக் கல்வியைப் போதிக்கும் மகிரிஷி

சத்திபனி ராஷ்டிரிய வேதவித்யா பிரதிஷ்தன் என்ற MSRVP மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. பதஞ்சலி நிறுவனத்தின் யோகப்பீட தொண்டு அமைப்பு உட்பட மூன்று தனியார் நிறுவனங்கள் இந்தப் பதவிகளான தங்களின் விருப்ப மனுக்களை அளித்தன. யோகபீடம் மற்றும் ரிதானந்தா பாலவேத கல்வி அறக்கட்டளைகு மற்றும் புனேவை மய்யமாக கொண்டு இயங்கி வரும் மகாராட்டிரா இன்ஸ்டியூட் ஆப்- டெக்னாலஜி உள்ளிட்ட இரண்டு நிறுவனங்களும் இந்த பட்டியலில் அடங்கும்.

இந்த மூன்று நிறுவனங்களும் தங்களின் அறிக்கையினை சமர்ப்பித்தன. நேசனல் புக் ட்ரஸ்ட்டின் இயக்குநர் கோவிந்த் பிரசாத் ஷர்மா முன்னிலையில் யோகபீடத்திற்கான அறிக்கையை பதஞ்சலி நிறுவனத்தின் இயக்குநராக உள்ள பால்கிருஷ்ணா சமர்ப்பித்தார். இவர் ராம்தேவின் சகோதரர் ஆவார். வேதக்கல்வி முறையின் மூலம் இந்தியாவின் பாரம்பரியம் பற்றிய அறிவினை நிலை நிறுத்த வேண்டும். வேதம், சமஸ்கிருதம், சாஸ்திரம், மற்றும் தரிசனம் ஆகியவற்றை இந்த கல்வி மூலம் மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய உள்ளோம். இதற்கும் பாடத்திட்டங்கள், தேர்வுகள், சான்றிதழ்கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றோம் என்று அவர் கூறியுள்ளார். இவை எல்லாம் எதைக்காட்டுகின்றன.

பாஜகவின் இந்த நேரடி நடவடிக்கை இனி காங்கிரஸ் ஆட்சிக்கு வரமுடியாது. அது தனது சுயத்தை இழந்து தேய்ந்து விட்டது என்ற முடிவுக்கு பாஜக வந்து விட்டது. இரண்டாவது முறையாக அது பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றதன் மூலம் இந்த முடிவுக்கு வந்துள்ளது. பாஜக என்ற இந்துத்துவ கட்சியை கொள்கையாலும், விஞ்ஞானத்தாலும், போராட்டங் களாலும் எதிர்க்க கூடிய வல்லமை பெற்ற ஒரே கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாகும். இடது சாரிகள் ஒன்றிணைவதும் மேலும் பலம் பெறுவதும் மிக முக்கியமானதாகும் என்று சமூக ஆர்வலர்கள் விரும்புகின்றனர்.

இந்த நிலையில் தமிழகத்தில் பாஜக கால் ஊன்ற செய்யும் நடவடிக்கைகள் அதற்கு துணையாக உள்ள மாநில அரசையும் மக்கள் நன்றாக புரிந்து கொண்டார்கள். மின் ஊழியர்களாகிய நாமும் புரிந்து கொண்டு நமது பாதையை தீர்மானிப்போம்.. அந்த பாதை இடதுசாரி பாதை என்று உறுதியுடன் தீர்மானிப்போம். பாஜக தனது இந்துத்துவா என்ற கோரமுகத்தையும் தீவிர முதலாளித்துவம் என்ற முகத்தையும் தெளிவாக காட்டுகின்றது. CAA, NRC, NPR அதுவே என்ற வடிவில் நம்முன்னே நிற்கின்றது. உழைப்பாளிகளாகிய நாம் சிவப்பு சிந்தனையுடன் காவிக்கூட்டத்தை விரட்டுவோம். மக்களுக்கான அரசை நிறுவ ஓரணியில் செயல்படுவோம்.

**- தி.ஜெயசங்கர்**

## வாழ்த்துகிறோம்



திருச்சி மாநகர் வட்டம், ஸ்ரீரங்கம் கோட்டம், மணச்சநல்லூர் மேற்கு பிரிவில் ஆக்க முகவர் முதல் நிலையாக பணிபுரிந்து வந்த தோழர் **எம். தாமஸ்ராஜரத்தினம்** அவர்கள் 31.12.2019 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/-ம், சிஐடியு அகில இந்திய மாநாட்டு நிதியாக ரூ. 4000/-மும் வழங்கினார். வாழ்த்துக்கள்.



தோழர் **பி.சி. தனக்கோடி,**
சிறப்பு நிலை முகவர், மேட்டுப்பாளையம்,
முசிறி கோட்டம், திருச்சி மாநகர் மின் வட்டக் கிளை அவர்கள் 29.02.2020 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
மின்கதிர் நன்கொடையாக ரூ. 1000/- வழங்கினார். வாழ்த்துக்கள்



# காணாமல் போகும் பொதுத்துறைகள்...!

இந்தியா சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகள் கடந்து விட்டது. இன்னும் நாம் வளரும் நாடுகள் என்ற பட்டியலில் இருந்து மாறவில்லை. சுதந்திரம் பெற்ற இந்திய நாடு இன்றும், கல்வி, வேலை, வறுமை ஒழிப்பு, சுகாதாரம் அனைவருக்கும் வீடு என்ற அடிப்படை விஷயங்களை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நாடாக இருந்து வருவதற்கு யார் காரணம் ? நமக்கு பின்னே சுதந்திரம் பெற்ற நாடுகள் நம்மை விட வேகமாக முன்னேறி இருப்பதற்கு எது க ாரணமாக உள்ளது என்பதை அறிய தவறி விட்டோம்.

வெள்ளையர்களிடமிருந்து நாம் சுதந்திரம் பெற்று விட்டால் சுதந்திர இந்தியாவில் பாலாறும், தேனாறும் ஓடும் என்ற நமது கனவுகள் கனவாகவே போனது. வெள்ளைய்யன் சென்றான், நம்மவர்கள் ஆட்சி கட்டிலில் அமர்ந்து 73 ஆண்டுகள் கடந்த பின்பும் இந்தியாவின் துயரம் என்று சொல்லப்படும் கல்வி, வேலை, வறுமை ஒழிப்பு, சுகாதாரம், ஏற்றத்தாழ்வு அனைவருக்கும் வீடு என்ற எதுவும் மாறவில்லை. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் 35 கோடியாக இருந்த மக்கள் தொகை இன்று 125 கோடிகளை தாண்டியது, 1947-ல் அமெரிக்காவின் ஒரு டாலருக்கு இந்திய பணம் ரூ.7.50/- இன்று ரூ.71.52 ஆக உயர்ந்ததை தவிர எந்த மாற்றமும் நிகழவில்லை. இதற்கு காரணம் யார் மக்களா ? அரசாங்கமா ?

மக்கள் மீது அக்கறை கொண்டு ஆட்சி செய்தால் அவர்களை சோசலிச வாதிகள் என்றும் மக்களை ஏக்கத்துடனேயே வைத்துக் கொள்பவர்களை முதலாளித்துவ வாதிகள் என்றும் அறியப்படுகிறார்கள். இந்தியாவை 73 ஆண்டுகள் ஆண்டவர்கள், ஆண்டு வருபவர்கள் முதலாளிகள், முதலாளிகளின் கைப்பாவைகள் என்று இந்த தேசத்தின் மீது பற்று கொண்டவர்கள் சொன்ன போது எள்ளி நகையாடியவர்கள் இன்று எல்.ஐ.சி-என் பங்குகளை விற்க துணிந்த போது புரிந்து கொண்டார்கள், இரயில்வேயை தனியாருக்கு விற்ற போது புரிந்து கொண்டார்கள், பொதுத்துறைகள் அனைத்தும் அம்பானிக்கும், அதானி வகையாறக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற அரசின் முடிவு என்பது அரசு முடிவல்ல, அரசை கைப்பாவையாக ஆட்டிப்படைக்கும் முதலாளிகளின் முடிவு. அந்த முடிவை அமலாக்க முனைகின்றது மத்திய அரசு. இதனால் ஏற்படும் பாதகங்களை பற்றி, பொருளாதார வீழ்ச்சி பற்றி எந்த கவலையும் கொள்ளாத அரசுகளே இங்கு உள்ளது தமிழகம் உட்பட.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை இன்று இந்திய பெருமுதலாளிகள் வாங்க ஆர்வமுடன் உள்ளனர். இவ்வளவு பெறும் தொகை இவர்களுக்கு எப்படி கிடைத்தது. 1991-ல் போடப்பட்ட GATT ஒப்பந்தம் மூலமாக தடையற்ற வியாபாரம் உலகம் முழுவதும் வியாபாரம் என்ற வகையில் முதலாளிகள் தனது மூலதனத்தை பன்மடங்கு பெருக்கிக் கொண்டனர். அத்துடன் அரசின் வரிச்சலுகைகள், Bail Out Loan மூலமாக பல லட்சம் கோடிகள் அவர்கள் பயன்பெற முடிந்தது. மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்த சலுகைகள் தொடர்கின்றது என்றால் இந்த அரசு மக்களுக்கான அரசல்ல, மக்களை எப்போதும் ஓட்டாண்டிகளாக வைத்துக் கொண்டு முதலாளிகளுக்கு சேவகம் செய்யும் பினாமி அரசு என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகின்றது.

உலகமயம், தாராளமயத்திற்கு பிறகு இந்திய முதலாளிகளின் சொத்து மதிப்பு பல மடங்கு உயர்ந்தது. கார்ப்பரேட் தொழிலதிபர்கள் உலக முதலாளிக்கு இணையாக சொத்து சேர்க்க முடிந்தது. அதனால் இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கி பன்மடங்கு இலாபத்தை ருசிக்க முனைகிறது. அதன் ஆசைக்கு லாவகமாக

வாலாட்டுகின்றது மத்திய அரசு. இந்தியாவின் நவரத்தினங்கள் என்று சொல்லப்படும் இரயில்வே, BSNL, BHEL எண்ணெய் நிறுவனங்கள், இரும்பு எஃகு ஆலைகள், இன்சூரன்ஸ், நிலக்கரி போன்ற இலாபம் கொழிக்கும் நிறுவனங்களை தனியாருக்கு விட முயல்கிறது. மத்திய அரசு இந்தியாவின் ஏர்லைன்ஸ் நிறுவனம் நட்டத்தில் இயங்குவதாக கூறி அதை 100 சதம் தனியாருக்கு தர முடிவெடுத்துள்ளது. சுமார் 87 ஆண்டுகளாக இந்திய அரசின் கையில் இருந்து வான்வழி போக்குவரத்து இனி TATA வின் கைக்கு செல்லவிருக்கின்றது. அதன் 89,000 கோடி கடன்களை 23,286 கோடி கடன்களாக குறைத்து கொடுக்க முடிவு செய்துள்ளது. மக்கள் பணத்தை முதலாளிக்கு கொடுக்கவா மத்திய அரசு. அதற்காகவா நாம் வாக்களித்து அமரச்செய்தோம்.

வெறும் 5 கோடி மூலதனத்தில் தொடங்கிய LIC இன்று இமாலய வளர்ச்சியை அடைந்துள்ளது. 40 கோடி பாலிசிதாரர்கள், நட்டத்தை கண்டிராத நிறுவனம், சிறந்த சேவை நிறுவனம் என்று அனைவராலும் பாராட்டப்பட்ட நிறுவனம். இதன் உபரி மதிப்பு ( Surplus Fund ) மட்டும் 53,211.91 கோடிகள், இதன் சொத்து மதிப்பு 32 லட்சம் கோடிகளாகும். LIC கடந்த நிதியாண்டில் டிவிடென்ட் ஆக மட்டும் அரசுக்கு தந்த தொகை ரூ.2611 கோடிகள். 1956-ல் வெறும் 5 கோடியில் துவங்கப்பட்ட LIC நிறுவனம் அதற்கு பிறகு அரசின் முதலீடு இல்லாமல் இமாலய வளர்ச்சியை பெற்றது. அது மட்டுமல்லாது 11 வது ஐந்தாண்டு திட்டத்திற்கு LIC - ன் பங்களிப்பு 14,23,055 கோடிககள் சராசரியாக ஆண்டுக்கு 2,84,000 கோடிகள். ரயில்வே, நெடுஞ்சாலை துறை, துறைமுக மேம்பாடு, மின்சாரம்,நீர்பாசனம் , குடிநீர், என அரசின் திட்டங்களுக்கு, சமூக நலனுக்கு முதலீடு செய்துள்ள தொகை ரூ.28,84,331 கோடிகள். 40 கோடிகள் பாலிசிகளை கொண்ட உலகின் முதல் நிறுவனம் LIC என்று சொல்வதில் பெறுமை கொள்வோம். தனியார் இன்சூரன்ஸ் என்ன செய்யும் இலாப வேட்டையை தவிர என்ன தெரியும்!

இதே போலத்தான் வங்கி, எண்ணெய் நிறுவனங்கள், மின்சாரம், போக்குவரத்து, BHEL அனைத்தும். அரசு துறை நிறுவனங்களுக்கு இலாபம் மட்டும் நோக்கமல்ல. சமூக சேவையும்,சமூகத்தின் தேவையும் உள்ளடக்கியதாக உள்ளது. மக்கள் பணத்தை மக்கள் செல்வத்தை முதலாளிகள் வங்கி கடன் என்ற பெயரால் விஜய் மல்லையா, நீரவ்மோடி முதல் 54 முதலாளிகள் கடன் வாங்கிக் கொண்டு வெளிநாடுகளுக்கு தப்பி ஓடி விட்டதாக மத்திய அரசே அறிக்கை தாக்கல் செய்துள்ளது. ஓடிப்போன முதலாளிகளிடமிருந்து பணத்தை வசூல் செய்வதற்கு பதிலாக வராக்கடன் பட்டியலில் சேர்த்து ஏழை மக்கள் தலையில் மிளகாய் அரைக்க முயல்கிறது மத்திய அரசு.

மத்திய,மாநில பொதுத்துறை ஊழியர்களும், அரசுத்துறை ஊழியர்களும், பொதுத்துறைகளை காக்கும் போராட்டம், தேசம் காக்கும் போராட்டமாக கருதி ஒன்றுபட வேண்டிய நேரமிது. துறைசார்ந்த கோரிக்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு மக்கள் நலன் என்ற பொதுப்புள்ளியில் இணைந்து போராட வேண்டிய நேரமிது. நம்மை நாமே பாதுகாக்க வேண்டிய நேரமிது. மத்திய அரசின் நடவடிக்கைகளால் தேசம் பின்னோக்கிப் போகின்ற போது தேசத்தை பாதுகாக்க, பொதுத்துறைகளை பாதுகாக்க, மக்களின் நலன்களை பாதுகாக்க தேசிய கொடியேந்தி ஒன்றுபட்டு போராடுவோம். தனி மனிதர்களாக அல்ல, குடும்பம் குடும்பாய் அணி திரள்வோம்.

இந்திய நாடு நம் நாடு
இந்திய தேசம் நம் தேசம்
விற்பனைக்கல்ல, விற்பனைக்கல்ல..

என்ற கோஷத்தை முன்னெடுப்போம். தேசம் காக்கும் லட்சிய போராட்டத்தில் லட்சங்களாய் ஒன்றிணைவோம். பெருமுதலாளிகளுக்கு எதிரான போராட்டம், ஏழைகளின் சேமிப்பை காக்கும் போராட்டம், இது ஒரு இரண்டாவது சுதந்திரப் போராட்டம்...ஒன்றிணைந்து போராட்டக் களத்தில் இறங்குவோம்...

**சோசலிசமே மாற்று .. மற்றதெல்லாம் ஏமாற்று....**

**- தி.ஜெயசங்கர்**

## வாழ்த்துக்கள்



தோழர் **ஏ. வெள்ளையப்பன்,** எல்.ஐ., உதவி பொறியாளர் அலுவலகம், காணியாளம்பட்டி, கரூர் மின்வட்டக் கிளை அவர்கள் 29.2.2020 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500 அளித்தார். வாழ்த்துக்கள்.



# பெண்கள், பெண் குழந்தைகள், மீதான





# தாக்குதல்களும் வன்முறைகளும்!

சமீப காலமாக பெண் குழந்தைகள் மீதும் பெண்கள் மீதும் தாக்குதல்களும், வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. பெண்களும், குழந்தைகளும், பொது வெளியில் சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

அனைத்து துறைகளிலும் பெண்கள் பங்கேற்பு உள்ள நிலையில் பல இடங்களில் ஆணாதிக்க மனோபாவத்தின் அடிப்படையில் அவர்கள் மீது தாக்குதலும் வன்கொடுமையும் அரங்கேறி வருகிறது. கலாச் சாரத்தில் பண்பாட்டு தளத்தில் பெண்களை போற்ற வேண்டிய சமூக கட்டமைப்புகள், ஊடகங்கள், தொலைக்காட்சிகள், பெண்களை போகப்பொருளாக, வீட்டு வேலைக்காரர்களாக, பிள்ளை பெற்று தரும் இயந்திரமாக, சித்தரித்து வருகிறது.

தினமும் வெளியாகின்ற செய்திதாளில் எங்கோ ஒரு மூலையில் பெண் குழந்தையும், அல்லது பெண்ணும் வன்முறைக்கு உள்ளாகிறார்கள். பெற்ற தந்தையே தான் பெற்ற மகளை சீரழிக்கும் அவலநிலை, குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது உரிய காலத்தில் விசாரணை நடத்தி தண்டனை அளிக்க வேண்டிய காவல்துறையும், நீதிமன்றங் களும், ஏனோ காலதாமதம் செய்கிறது.

தாமதிக்கப்பட்ட நீதி என்பது மறுக்கப்பட்ட நீதி என கூறிவந்தாலும் காவல்துறையும் நீதிமன்றங்களும் சில நேரங்களில் அரசியல், பணபலம், வழக் கறிஞர்களின் வாதம், ஆகிய வற்றிற்கு தள்ளப்படுகிறது.

டெல்லி நிர்பயா வழக்கு, சென்னையில் அயனாவரம் அடுக்குமாடி குடியிருப்பில் வாய் பேசமுடியாத சிறுமிக்கு நடந்த கொடுமை -அதன் வழக்கு தண்டனைகள் விதிக்கப்பட்டும். அதை அமல் படுத்துவதற்கு பதிலாக தேவையற்ற கால தாமதங்களை உருவாக்கி கருணை மனுக்கள் மூலம் காலதாமதம் செய்ய சட்டத்திற்கு விரோதமாக செயல்படுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மக்கள் உடனுக்குடன் நீதி கிடைக்க வேண்டும் என்ற முறையில் தெலுங்கானாவில் நடைபெற்ற பாலியல் செய்து படுகொலை செய்யப்பட்ட ஒரு வழக்கில் குற்றவாளிகள் எனக்கருதி காவல்துறையினர் சுட்டுக் கொன்றதை வரவேற்கும் நிகழ்வை விரும்புகின்றர். ஆனால் உண்மையை முழுமையாக விசாரித்து பின்புலத்தில் செயல் படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

நவீன கலாச்சாரத்தில் பெண்களின் நடை, உடை பாவனைகள் எல்லாம் கொச்சைப் படுத்தப்படுகின்றன. எங்கேயோ எப்போதோ நடந்த ஒரு தவறுக்காக ஒட்டு மொத்த பெண் இனத்தை கேவலப்படுத்தும் மனோபாவங்கள் மேலோங்கி நிற்கிறது. பெண் என்பவர் ஆண் என்பவருக்கு அடிமை என்ற எண்ணம் ஏற்பட்டு அது செயல் வடிவத்தில் அமலாகவில்லை என்ற நிலை வரும் பொழுது பெண்கள் மீதான தாக்குதல்கள் கொலை வரை சென்று நிற்கிறது.

இந்த மனோபாவங்கள் ஏன் மாறவில்லை என்று நாம் கேள்வி எழுப்பினால் கார்ப்பரேட் ஊடகங் களால், தொலைக்காட்சிகளால், சினிமாத்துறையில் பெண்களை போகப் பொருளாக, வில்லியாக சித்திரிக்கும் தொலைக்காட்சி தொடர்களில், அதிகம் பங்கு வகிக்கின்ற நிகழ்வு உள்ளது. இந்த வரவேற்பின் காரணமாகத்தான் சீரியல் தொலைக்காட்சி

தொடர்களில் கூட பாகம் இரண்டாக (சித்தி-2) வந்து கொண்டிருக்கிறது. இன்னொன்று நாம் தொடர்பு கொண்டு அலுவலகப் பணிகள், குடும்பத் தின் அவசரப்பணிகள், ஆகிய வற்றிற்கு வைத்துள்ள கைப்பேசி இன்று அத்தாவசியமான ஒன்றாக, இன்னும் சொல்லப் போனால் மனித உறுப்புகளில் ஒன்றாக மாறி விட்டது. நல்ல விஷயத்திற்கு பயன்படுத்துவதற்கு பதிலாக அதில் உள்ள தொழில் நுட்பங்களை குறிப்பாக கேமரா, பேஸ்புக், டுவிட்டர், வாடஸ் ஆப், மூலம் தவறான தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

மாதா, பிதா,குரு, என்ற மூன்றாம் நிலையில் உள்ள கல்வி கற்றுத்தர வேண்டிய ஆசிரிய பெருமக்களும், பேராசிரியர்களும், தன்னிடத்தில் குருவாக மதித்து நடக்கும் பெண் குழந்தைகளிடமே தவறாக நடக்கும் போக்குகளும் நாடு எங்கே செல்கின்றது என்ற கவலை எல்லோருக்கும் எற்படுகிறது. சமீபத்தில் சென்னை ஐ.ஐ.டி.யில் ஏற்பட்ட சம்பவம் எந்த விதத்திலும் நியாயம் கற்பிக்க முடியாது. இந்தியாவில் பெருமைமிகுந்த ஐ.ஐ.டி.கல்வி நிறுவனத்திலே இந்த நிலை என்றால் கிராமப்புற கல்லூரி, பள்ளிகளின் நிலை கவலை அளிக்கிறது. சமீபத்தில் நல்லா சிரியர் விருது பெற்ற ஆசிரியர் ஒரு வரை மாணவிகளிடம் தவறாக நடந்து கொண்டதற்காக நீதிமன்றம் தண்டனை அளித்துள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியரோ நான் நல்லாசிரியர் விருது பெற்றவர் என நீதி மன்றத்தில் முறையிடுகிறார்.

தன் குழந்தைகளாக பாவித்து கல்வி கற்றுத்தர வேண்டிய இந்த ஆசிரியர் தனது செயலை மறைப்பதற்கு நல்லா சிரியர் என்ற முகமூடியை பயன்படுத்துகிறார். ஆசிரியர் மட்டுமா தனக்கு வாக்களித்த மக்கள் தன்னிடம் உதவி என்று கேட்டு வருகின்ற பொழுது சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச் சர்கள் வரை மற்றும் ஆளுநர்களும் விதிவிலக்கல்ல.

இது நமது தேசத்திற்கு விடப்பட்ட சவாலாகும். பெண் களையும், பெண் குழந்தைகளையும் பாதுகாப்பதில் அவர்களின் வளர்ச்சியில் நாம் செலுத்தும் அக்கரையும் அவர்கள் நம்மீது வைக்கும் நம்பிக்கையும் தொடர்ந்தாலே நாமும் முன்னேறு வோம். நாடும் முன்னேறும்

நமது குழந்தைகளுக்கு( ஆண்,பெண்) நல்லதை சொல்லிக் கொடுப்போம் நல்லதை கற்றுக் கொடுப்போம், நல்ல புத்தகங்களை வாசிக்க வைப்போம். பெண்களை, பெண் குழந்தைகளை நேசிக்கின்ற ஒரு நல்ல சமுதாயத்தை நாம் இணைந்து உருவாக்குவோம்.

- எஸ். இராஜேந்திரன்

---

## இதைவிட கொடுமை இந்த தேசத்தில் இருக்க முடியுமா?



பி.ஜே.பி. ஆளும் குஜராத் மாநிலத்தில் பூஜ் என்ற இடத்தில் ஸ்ரீசகஜானந்த் மகளிர் கல்லூரி உள்ளது. 1500 க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர். தங்கும் விடுதியும் உள்ளது.

இந்த கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கம் மாணவிகள் தங்களின் மாதவிடாய் காலங்களில் கல்லூரி வளாகத்தில் கோவில், உணவகம் போன்ற பகுதிகளுக்கு செல்லக் கூடாது. சக மாணவிகளை தொட்டும் பேசக் கூடாது என்கிற கறார் விதி வகுக்கப்பட்டு அமலாக்கி வருகிறது.

கல்லூரி வளாகத்தில் உள்ள கோயிலில் சில மாணவிகள் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த போது வேறு சில மாணவிகள் அவர்களை தொட்டுப் பேசியுள்ளனர்.

இதை கேள்விப்பட்ட கல்லூரி முதல்வர் எம். ரணிங்கா, 68 மாணவியருக்கும் மாதவிடாய் சோதனை நடத்துமாறு உத்திரவிட்டுள்ளார். விடுதி பெண் ஊழியர்கள் கழிவறைக்க அழைத்து சென்ற பரிசோதனை செய்துள்ளனர்.

# வாரிய பணியில் புதியதாக பணி நியமனம் பெறுபவர்கள் தவறான கல்வி சான்றிதழ் வழங்கி உள்ளார்களா? அல்லது முறையான கல்விச் சான்றிழை சரிபார்த்து பணிப்பதிவேட்டில் கல்வி சான்றிதழ்களை இணைத்துவைத்திட வழங்கிய வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH,**

144, ANNA SALAI, CHENNAI - 2

**Memorandum No.68638/A18/A181/2019-1 dated the 4th February 2020.**

Sub : Establishment - Educational Qualification - Entry of candidates with bogus educational qualification and other certificates - Verification of its genuineness - Certain additional instructions - Issued.

Ref : (1) Memo.(Per) No.18630//A18/A182019-1(SB), dated 04.04.2019.

(2) Memo.(Per) No.48608/A18/A182019-1(SB), dated 28.11.2019.

In the Memo. first cited, instructions have been issued to all the Appointing Authorities to complete the process of verification of genuineness of the educational qualification certificates in respect of the left out cases and to affix a copy of the same in Service Registers of employees, on or before 31.05.2019. Reiterating the said instructions, all the Chief Engineers/Superintending Engineers were requested to ensure that genuineness of all the educational certificates of the officers /employees working under their control is verified and a copy of the same affixed in the Seruice Registers of the concerned officers/employees, on or before 15.02.?020 - vide Memo. second cited.

2. It has been brought to the notice that apar from the academic qualifications, the genuineness of ceftificates pertaining to other pre-requisite qualifications for appointment to the initial level cadre, is not verified by the Appointing Authorities.

3. Therefore, all the Appointing Authorities are hereby instructed to ensure that apart from verifying the genuineness of the academic qualifications of all the officials as per the instructions issued earlier, the genuineness of certificates pertaining to other pre-requisite qualifications is also verified.

4. Fufther, in respect of future recruitments, the Appointing Authorities are instructed to complete the process of verification of all the relevant ceftificates before declaration of probation of the employees. If the said process gets delayed for valid reasons, the probation of the officials/ employees should be extended till the verification process is over.

5. Any violation of the above instructions will be viewed seriously.

6.The receipt of this Memorandum shall be acknowledged.

**( BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR )**

**S. VINEETH,**

**SECRETARY ( FULL ADDITIONAL CHARGE )**

## உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி 1.7.1979 முதல் 1.7.1996 வரை காலத்தில் ஓய்வூதியம் வழங்கிட ஊழியர் கடைசி மாதத்தில் பெற்ற சம்பளத்தில் 50 சதம் பென்சன் வழங்க வேண்டும் என்ற உத்திரவை அமல்படுத்தக் கோரி வாரியத் தலைவருக்க எழுதிய கடிதம்

**நாள்: 19.02.2020**

பெறுநர்

**செயலாளர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை 600 002.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - பென்சன் - தகுதிகாண் ஆண்டு 33 வருடத்திலிருந்து 30 வருடமாக குறைத்தது - 01.10.79-லிருந்து 01.07.96-க்கு முன்பும் ஓய்வு பெற்றவர்களுக்கு பலனை அனுபவிக்க உத்திரவு வெளியிட்டது - பென்சன் கணக்கீடு - தொடர்பாக

பார்வை : (1) Per BP(Ch) No.253(SB) dt 23.09.96

(2) (Per) CMD Tamgedco Proceedings No. 205 dt 26.11.2018

பார்வை (2)-ல் கண்ட உத்திரவு தொடர்பான எங்களது கருத்துக்களை தங்களது நடவடிக்கைக்காக தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்வை(1)-ல் கண்ட வாரிய உத்திரவில் முழு பென்சன் கணக்கிட 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டாக குறைத்து 01.07.96 முதல் வழங்கிட உத்திரவு வெளியிடப்பட்டது. மேலும் அந்த உத்திரவில் கடைசியாக ஊதியம் பெற்ற பத்து மாதங்களின் சராசரி அல்லது கடைசி மாத ஊதியத்தின் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழக அரசு அரசாணை 245 நாள் 19.07.2018-ன் மூலம் உச்சநீதி மன்ற தீர்ப்பின் படி இந்த சலுகையை 01.10.79 லிருந்து 01.07.96 முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என உத்திரவு வெளியிடப்பட்டது.

இதனையடுத்து எங்களது பென்சனர் அமைப்பு உள்ளிட்ட ஓய்வூதியர் சங்கங்கள் மின்வாரிய ஊழியர் அலுவலர்களுக்கு இச்சலுகையை நீட்டிக்க வழங்க கோரி முறையீடு செய்தனர். அதனையடுத்து பார்வை(2)-ல் கண்ட உத்திரவு மூலம் மின்வாரிய ஊழியர்களுக்கும் இப்பயனை அடைய உத்திரவு வெளியிடப்பட்டது.

ஆனால் இந்த உத்திரவின் அடிப்படையில் பென்சன் திருத்தம் செய்யக்கோரி எங்களது சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.பஞ்சரத்தினம் அவர்கள் விண்ணப்பித்த பொழுது, மேற்பார்வை பொறியாளர் விருதுநகர் அவர்களும், தலைமை அகநிலை தணிக்கை அலுவலரும் அவர்களும், கடைசி 10 மாத சம்பளத்தின் சராசரியை மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும். 01.07.96-க்கு பின்பு தான் கடைசி மாத சம்பளத்தின் 50 சதவீதம் என பார்வை(2)-ல் கண்ட உத்திரவில் உள்ளதாக கூறி நிராகரித்து விட்டார்கள். வாரிய உத்திரவில் அவ்வாறு எங்கும் கூறப்படவில்லை. அரசாணை, பென்சன் விதி, ஆகியவற்றில் சொல்லப்பட்ட கூற்றின் அடிப்படையில், 01.10.79-லிருந்து 01.07.96 முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும், 10 மாத ஊதியத்தின் சராசரி அல்லது கடைசி மாத ஊதியத்தின் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதை வழங்க தகுந்த உத்திரவு, மேற்கண்ட பார்வை(2)-ல் கண்டுள்ள வாரிய உத்திரவுக்கான திருத்தமும் வெளியிட கேட்டுக் கொள்கிறோம்.

ஆகவே, செயலாளர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு தகுந்த உத்திரவை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**

பொதுச் செயலாளர்

# வருங்கால வைப்புநிதியிலிருந்து ஊழியர்களுக்கு சேர வேண்டிய முன்பணத்தை காலதாமதமின்றி வழங்க வேண்டி வாரியத்திற்கு நாம் எழுதிய கடிதம்

பெறுநர் நாள்: 26.02.2020

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - நிதி - ஊழியர்களின் பணப்பயன்கள் - வருங்கால வைப்பு நிதி - சரண்டர் விடுப்பு - கடந்த ஆறு மாதமாக வழங்காமல் இருப்பது - தொடர்பாக...

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்களுக்கு கடந்த 6மாத காலமாக பொதுவருங்கால வைப்பு நிதியிலிருந்து கோரப்பட்ட முன்பணம், பகுதி இறுதி வழங்கல், மற்றும் சரண்டர் விடுப்புக்கான தொகை இரட்டிப்பு ஊதியம், பயணப்படி போன்றவைகளுக்கான நிதி வழங்கப்படாமல் உள்ளது.

மின்வாரிய ஊழியர்களின் குடும்பங்களில் மருத்துவம், கல்வி, உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு நிதி தேவை, இந்த நிதியை உரிய காலத்தில் வழங்காமல் இருப்பது நியாயமல்ல! அதுவும் பொது வருங்கால வைப்பு நிதி என்பது தொழிலாளர்களுடைய பணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் உடனுக்குடன் நிதியை வழங்கும் அரசும், மின்வாரிய நிர்வாகமும் தொழிலாளர்களை வஞ்சிப்பது நியாயந்தானா?

கூடுதல் பணிச்சுமையை சுமந்து தனது பணியை சிறப்பாக செய்து வரும் தொழிலாளியை அவரது உரிமைக்கான பணம் உரிய காலத்தில் கொடுக்க இயலாது என்பது சரியல்ல!

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து அனைத்து வட்டங்களும் நிதியை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்து, தொழில் உறவை மேம்படுத்த கேட்டுக் கொள்வதோடு, எங்களை போராட்டத்திற்கு தள்ள வேண்டாம் எனக் கேட்டுகொள்கிறோம்.

**நன்றி** !

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



சேலம் மின் திட்டத்தில் தெற்கு கோட்டம்,
வீரபாண்டி பிரிவு அலுவலகத்தில்
மின்பாதை ஆய்வாளராக பணிசெய்த
**தோழர் பி. குருநாதன்**
அவர்கள் 31.01.2020 அன்று வாரியப் பணியிலிருந்து ஒய்வு பெற்றார். மினக்திர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/-ம் சேலம் கிளைக்கு ரூ. 1000/-மும் நன்கொடையாக வழங்கினார். வாழ்த்துக்கள்

# தீர்க்கப்படாத கோரிக்கைகள் மீது உடன் தீர்வு காண கோரி வாரியத் தலைவரிடம் எழுத்து பூர்வமான முறையீடு

பெறுநர் நாள்: 14.02.2020

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : **நிர்வாகம் - பணியாளர்களின் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் பல முறை பேசியும் தீர்வு காணாதது - தொடர்பாக**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு இடமாறுதல் உள்ளிட்ட பிரச்சனைகளின் மீது தொடர்ந்து தங்களிடம் பேசியும் இன்று வரை தீர்வு ஏற்படவில்லை என்பதை கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1. கணக்கீட்டாளர்கள் பஞ்சாயத்து காசோலை தொடர்பான பிரச்சனையில் கடந்த ஒரு வருடமாக பலமுறை தங்களிடம் பேசியும் தீர்வு எட்டப்படவில்லை! இது தொடர்பாக தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு, தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் ,இயக்குநர்/விநியோகம் ஆகியோரிடம் பேசியும் தீர்வு காணப்படவில்லை! பிரிவு அலுவலர்கள் தங்களது அலுவலகத்தில் பணியாற்றும் கணக்கிட்டு பிரிவு ஊழியர்களிடம் சொன்ன காரணத்தால், அலுவலர் சொல்வதால் செய்த தவறுதான், ஆனால் தற்போது இவர்களை மட்டும் பலிகடாவாக ஆக்கி கடந்த இரு வருடமாக நடவடிக்கை எடுத்து, பணத்தை வசூல் செய்து இன்னமும் அச்சுறுத்தி வருவது நியாயமல்ல!

   இக்கோரிக்கை மீது விரைந்து நடவடிக்கை எடுக்க கோருகிறோம்.

2. வாரியத்தில் விருப்ப மாறுதலுக்கான விதிமுறைகள் உள்ளன. ஆனால் சமீபகாலமாக இந்த விதிமுறைகளை மின்துறை அமைச்சர் அலுவலகம் மற்றும் வாரிய உயர் அலுவலர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

   விருப்ப மாறுதலில் வாரிய விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதில்லை. பலமுறை தங்களிடம் ஆதாரங்களுடன் கூறியும் இன்னமும் அதே தவறுதான் நீடிக்கிறது. இதனால் **Reback Policy** மற்றும் விருப்ப மாறுதலில் விண்ணப்பித்தவர்கள் அதன் பலனை அனுபவிக்க முடியாமல் போகிறது.

   இது ஊழியர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதோடு லஞ்ச லாவண்யத்திற்கு வழிவகுக்கும் செயல் என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

3. பகுதிநேர ஊழியர்களை நிரந்தரப்படுத்துவது சம்மந்தமாக கடந்த இரு ஆண்டுகளாக இந்த பணி நடைபெற்று வருகிறது. **Recruitment** பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லை, எனவும் கூடுதல் பணிச்சுமை காரணமாக இந்த பணிகள் நடைபெறவில்லை என்றும் கூறப்படுகிறது. இது எந்த விதத்திலும் நியாயமல்ல. அலுவலகத்தையும் கழிவறைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ள இந்த பணியாளர்களின் பணி அவசியம். அலுவலக பணியாளர்கள் வசூல் செய்து தரும் சொற்ப தொகையில் தான் இவர்களது வாழ்க்கை ஓடுகிறது,.

   இது தொடர்பாக பலமுறை பேசியும் தீர்வுகாணப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.

4. வட்ட அலுவலகங்களிலிருந்து ஊழியர் நலன் சார்ந்த விஷயங்களில் வாரிய அலுவலகத்தில் - விளக்கம் கோரப்படும் பொழுது தேவையற்ற காலதாமதம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. இதனால் ஊழியர்கள் நலன் பாதிக்கப்படுவதோடு நிர்வாகத்தின் மீது அவநம்பிக்கை ஏற்படுகிறது.

5. அனைத்து பணியாளர்களுக்கும் முதன்மை பட்டியல் வெளியிட கோரியிருந்தோம். ஆனால் இன்று வரை அமலாகவில்லை! ஒவ்வொரு முறையும் விடுபட்டு போனவர்கள் என விண்ணப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, முதன்மை பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. திரு. விஜய சங்கரபாண்டியன் - செயற்பொறியாளர் தூத்துக்குடி நகரம் - தொழிலாளர் விரோத நடவடிக்கை தொடர்பாக புகார் தெரிவித்தும் அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதினால் ஊழியர்களை அவர் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார். மேலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே வட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்.

7. களஉதவியாளர் பணியிடங்களை நிரப்பிட ஏற்கனவே மின்துறை அமைச்சர் அறிவித்த 2900 ஐடிஐ தொழில்நுட்ப படித்தவர்களை உடனடியாக எடுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு 22.02.2018 முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/- ஐ வாரியமே நேரிடையாக வழங்கிட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொழில் உறவை மேம்படுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**நன்றி** !

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

---

# இளநிலை உதவியாளரிலிருந்து உதவியாளர் பதவி உயர்வு வழங்க கோரி வாரியத்திற்க எழுதிய கடிதம்

**நாள்: 26.02.2020**

பெறுநர்

**தலைமைப்பொறியாளர்/ பணியமைப்பு அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - இளநிலை உதவியாளரிலிருந்து- உதவியாளர் (கணக்கு) மற்றும் நிர்வாகம் பதவி உயர்வு வழங்க கோருதல் - தொடர்பாக

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இளநிலை உதவியாளர்களாக (கணக்கு) பிரிவில் பணியாற்றுவருபவர்களுக்கு முறையே உதவியாளர் (கணக்கு ) உதவியாளர் (நிர்வாகம்) பதவி பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்து வருகிறது.

மின் வாரியத்தில் உதவியாளர் கணக்கு மற்றும் நிர்வாக பிரிவில் காலியிடங்கள் உள்ளன. ஆனால் நீதிமன்ற வழக்கை காரணம் காட்டி நிரப்பப்படாமல் இருக்கிறது.

நீதிமன்ற வழக்கு அவர்களின் முதன்மைப் பட்டியல் சம்மந்தமானது. எனவே தற்போது உள்ள சூழலில் பதவி உயர்வு வாய்ப்புள்ளவர்களுக்கு முதன்மை பட்டியல் சம்மந்தமாக உறுதி மொழி பெற்று பதவி உயர்வு வழங்கிட, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி** !

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

# நேரடி பணிநியமன தேர்வில் கேட்கும் கேள்விகளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கேட்க வேண்டும் என்ற கோரி வாரியத் தலைமைக்கு நாம் எழுதிய கடிதம்

பெறுநர் நாள்: 19.02.2020

1. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

2. தலைமை பொறியாளர்/பணியமைப்பு அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா

பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் - நேரடி பணி நியமனம் கணக்கீட்டாளர் மற்றும் இளநிலை உதவியாளர் வினாத்தாள் - ஆங்கிலத்திலும் குறிப்பிட்ட பகுதி மட்டும் தமிழில் வினாத்தாள் கேள்விகள் இருக்கும் என அறிவித்துள்ளதை மாற்றி 100 சதவீதம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வினாத்தாள் கேள்விகள் இருக்கும் என மறு அறிவிப்பு செய்து - தேர்வுகள் நடத்திட கோருதல் - தொடர்பாக

பார்வை : 1. NOTIFICATION No. 01/ 2020, dt 08.01. 2020
2. NOTIFICATION No. 03/ 2020, dt 08.01. 2020

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நேரடி பணி நியமனம் மூலம் 1300 கணக்கீட்டாளர் மற்றும 500 இளநிலை உதவியாளர் பதவிகளை நிரப்பிட பார்வை 1 மற்றும் பார்வை 2 மூலம் அறிவிப்பு செய்துள்ளதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். இந்த இரு அறிவிப்பிலும் பாரா -வில் வினாத்தாள் கேள்விகள் முழுவதும் ஆங்கிலத்திலும் குறிப்பிட்ட பகுதி மட்டுமே தமிழில் இருக்கும் என அறிவித்துள்ளது. ( The question paper for ONLINE EXAMINATION Will be of Objective type in the Degree standard ( Arts (or) Science (or) commerce) and it will be in Engilsh and in some sections will be in tamil )

இதே அறிவிப்பில் பாரா 5G -ல் தமிழ் வழி கல்வியில் படித்தவர்களுக்கு 20 சதவீதம் பணியிட ஒதுக்கீடு வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதே பாரா 5G -ல் தமிழ்வழி கல்வியில் படித்தவர்கள் PSTM இல்லை எனில் PSTM -க்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு அல்லாதவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ( if The candidates with PSTM are not availble for selection for apponinment againts reserved turn such turn Shall be filled up by Non - PSTM candidates)

மேலும் கணக்கீட்டாளர் பதவிக்கு கல்வி தகுதியாக கலை, அறிவியல், மற்றும் வணிகவியல் பாடத்தில் பட்டம் படித்து இருக்க வேண்டும் எனவும் இளநிலை உதவியாளர் பதவிக்கு பி.காம் படித்து இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மேற்கண்ட அனைத்து பட்ட படிப்புகளும் முமையான தமிழ்வழி கல்வியில் பயிற்றுவிக்கப்படுவதோடு, தேர்வு வினாத்தாளள்கள் முழுவதும் தமிழ் மொழியிலேயே வழங்கப்படுகிறது.

மேற்கண்ட மின்வாரிய ஆன்- லைன் தேர்வுகளின் வினாத்தாளின் பெரும்பகுதி ஆங்கிலத்தில் இருந்தால் தமிழ்வழியில் பட்டம் படித்து போட்டி தேர்வில் பங்கேற்பவர்கள் வெற்றி பெற முடியாத நிலை உள்ளது.

எனவே, மேற்கண்ட அறிவிப்பை மாற்றி 100 சதவீதம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வினாத்தாள் கேள்விகள் இருக்கும் என மறு அறிவிப்பு செய்த பிறகு இந்த தேர்வுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வினாத்தாள் வழங்கி தேர்வுகள் நடத்திட கேட்டுக் கொள்கிறோம். தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



# எழுந்து நிற்போம் ! இணைந்து நிற்போம்!

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஏழை,எளிய கிராமப்புற, நடுத்தர மக்களின் வாழ்வாதார சமூக மறுமலர்ச்சிக்கும், விவசாய மற்றும் சிறு மற்றும் குறு தொழில்களின் பிரமாண்டமான வளர்சிக்கும் மின்சாரம் முக்கிய பங்கு வகித்துள்ளது. பி.ஜே.பி அரசு இந்த மின்துறையை கபளீகரம் செய்து, தனியார்மய, தாராளமய, உலகமய கொள்கை அமலாக்கம் மூலம் இந்திய நாட்டு பெரு முதலாளிகள் மட்டுமில்லாமல் உலக பெரு முதலாளி களின் லாபவேட்டைக்கு திறந்து விட்டுள்ளது.

நாட்டின் அரசியல் சாசனத்தை உருவாக்கி யவரும், முதல் மின்துறை அமைச்சருமான மாமேதை டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் "அனைவருக்கும் மின்சாரம்" என்பதை அரசியல் சாசனத்தில் உள்ளடக்கி மின்துறையை "சேவைத் துறை" என உறுதிசெய்ததோடு, குடிசைகள், விவசாயம், சிறு, குறுந் தொழில் மற்றும் வீடுகளுக்கு "இடைமானியம்" என்று சொல்லக்கூடிய "CROSS SUBSIDY " என்பதையும் உறுதிப்படுத்தி மின்சார சட்டம் 1948 உருவாக்கப்பட்டது. இதன் மூலம், மக்கள் பணத்தில் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு கிராமங்கள் மலைகள் என பரந்து விரிந்த மிக வலுவான மின்கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

### இந்திய மின்துறை வளர்ச்சி

1947-ல் இந்தியாவின் மொத்த மின்னுற்பத்தி நிறுவுத்திறன் 1362 MWஆக இருந்த போது பயன்பாட்டு தேவை 480 MW மட்டுமே இருந்தது. தற்போது 2019 -ல் மொத்த மின்னுற்பத்தி நிறுவுத்திறன் 3,60,454 MWஆக உள்ளது. ஆனால் இதில் மாநில அரசின் உற்பத்தி திறன் 1,02,817 MW, மத்திய அரசின் உற்பத்தி திறன் 9,0176 MW மற்றும் தனியார் பெரு முதலாளிகளின் உற்பத்தி திறன் 1,67,461 MW ஆக உள்ளது.ஆனால் இந்தியாவின் தற்போதைய பயன்பாட்டு தேவை 1,66,769 MW ஆக மட்டுமே உள்ளது.

மேலும் இந்த தனியார் பெரு முதலாளிகளின் உற்பத்தித்திறன் 2000 ஆம் ஆண்டு 9936 MW ஆகவும் 2011 ஆம் ஆண்டு 35450 MW ஆகவும் 2019 ஆம் ஆண்டு 1,67,461 MW ஆகவும் அரசின் தனியார்மய கொள்கை காரணமாக அசுர வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது தேவை இல்லாததால் செயல்படாமல் இருக்கும் இந்த தனியார் மின்நிலையங்களை லாபகரமாக இயக்கவே தற்போது 2020 பிப்ரவரி-1 மத்திய பட்ஜெட்டில் பாரா-58- ல் அரசின் மின் நிலையங்களுக்கு மூடுவிழா நடத்த சுற்றுசூழலை சொல்லி அரசு அறிவிப்புகளை செய்துள்ளது.

### தமிழக மின்துறை வளர்ச்சி

தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி துவங்கும் போது தமிழகத்தின் மின்னுற்பத்தி நிறுவுத்திறன் 256 MW -ஆக இருந்தது அப்போது பயன்பாட்டு தேவை 172 MW -ஆக இருந்தது. தற்போது 2019 - ல் தமிழகத்தின் மின்னுற்பத்தி நிறுவுத்திறன் 7143 MW ஆக உள்ளது, ஆனால் பயன்பாட்டு தேவை 16,000 MW -ஆக உள்ளது.

ஆனால் தமிழகத்தின் மின்னுற்பத்தி

நிறுவுத்திறன் 18747 ஆறு என தவறான புள்ளிவிவரத்தை அரசும் வாரியமும் அளித்து வருகிறது. உண்மையில் இதில் தமிழக மின்வாரியத்தின் நிறுவுத்திறன், புனல் மின்னுற்பத்தி - 2307 MW , அனல் மின்னுற்பத்தி - 4320 MW, கேஸ்- 516 ஆறு என மொத்தம் - 7143 MW மட்டுமே, எனவே மேற்கண்ட 18747 ஆறு-ல் எஞ்சிய 11604 MW -ல் 6152 MW மத்திய அரசின் தொகுப்பில் இருந்தும், (IPP,CPP,LTOA & MTOA) மூலம் 5452 MW தனியாரிடம் இருந்தும் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறது. இதை தமிழகத்தின் சொந்த மின்னுற்பத்தி போல பொய்யாக மின் மிகை மாநிலம் என தம்பட்டம் அடித்து வருகிறது.

**சாமானியர்களுக்கு மாநில அரசு உதவுவதை தடுத்த சட்டம்**

மத்திய BJP அரசு, சாமான்யர்களுக்கு வழங்கும் இந்த "இடைமானியம்" வரம்பற்ற நிலையில் உச்சத்தை அடைந்து விட்டதாக கூறி மின்சார ஒழுங்குமுறை ஆணைய சட்டம் 1998 -ஐ கொண்டுவந்து, ஏற்கனவே மின்சார சட்டம் 1948 மூலம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்த மேற்கண்ட மின்கட்டண நிர்ணய உரிமையை பறித்து மத்திய, மாநில ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றியது.

**மின்சாரத்தை "வணிகப்பொருளாக" மாற்றிய "மின்சார சட்டம் 2003"**

சமூக வளர்ச்சியை கணக்கில் கொண்டு "சேவை துறையில் " அத்தியாவசிய பொருளாக, மாநில அரசின் நிறுவனமாக இருந்த மின்சாரத்தை "வணிகப்பொருளாக" மாற்றி, டாக்டர்.அம்பேதகர் உருவாக்கிய மின்சட்டத்தை குப்பையில் வீசிவிட்டு "மின்சார சட்டம் 2003" -ஐ மத்திய க்ஷதுஞு அரசு அரங்கேற்றியது. அதனடிப்படையில் மின்வாரியங்கள் பிரிக்கப்பட்டு கம்பெனி சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

மின்சார சட்டம் 2003- மூலம் தனியாரை மின் உற்பத்தி, விநியோகம் , தொடர் அமைப்பில் போட்டியாக அனுமதிக்கும் போது, தரமான, குறைந்த விலையில் அனைவருக்கும் மின்சாரம் கிடைக்கும் எனவும் மற்றும் மாநில அரசின் மின் வாரியங்களின் நஷ்டங்கள் குறையும் எனவும் மத்திய BJP கூறியே கார்ப்பரேட்டுகளுக்கு கதவை திறந்துவிட்டது.

ஆனால் கடந்த 16 ஆண்டுகளில் மேற்கண்ட சட்டம் அமல்படுத்தப்பட்ட அனைத்து மாநிலங்களிலும் இதற்கு நேர்மாறாக மின்கட்டணம் பலமடங்கு உயர்ந்ததோடு, மாநில மின் வாரியங்களின் நஷ்டமும் பலமடங்கு உயர்ந்து 2003 மின்சட்டம் படுதோல்வி அடைந்து உள்ளதோடு பெரும் முதலாளிகளின் லாபவேட்டைக்கு மின்துறையை இரையாக்கி உள்ளது.

**மின்சார திருத்த மசோதா 2018**

இந்த சூழலில், நாட்டில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி தோல்வியையும், பின்னடைவையும் ஏற்றுக் கொண்டு 2003 மின்சட்டதை தூக்கி ஏறிந்து விட்டு, பிரித்த மின்வாரியங்களை மீண்டும் ஒன்று சேர்க்காமல், மேலும் தனியார் லாப வேட்டைக்கு, பாஜக அரசு மின்சார திருத்த மசோதா 2018 ஐ உருவாக்கி மைய மந்திரிசபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அடுத்து வருகின்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த மின்சட்ட திருத்த மசோதா 2018 மூலம் மின்விநியோக கட்டமைப்பின் நிர்வாகத்தை தனியாகவும், மின்கட்டண வசூலோடு இணைந்த மின்சார வியாபாரத்தை தனியாகவும் பிரித்துள்ளது. எனவே ஒரே வீதியில் பல தனியார் நிறுவங்கள் முதலீடு எதுவும் செய்யாமல் அரசால் நிறுவப்பட்டுள்ள விநியோக கட்டமைப்பை பயன்படுத்தி மின் விநியோகம் செய்து மேலும் கொள்ளை லாபம் ஈட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் இந்த சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே, மின்நுகர்வோர்கள் தங்களுக்கு தேவையான தனியார் நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் வகையிலும், தனியார் நிறுவனம் தான் விரும்பும் வசதிபடைத்த மின்நுகர்வோரை தேர்ந்தெடுக்கும் வகையிலும், மின்கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தும் வகையிலும் உள்ள புதிய உயர் தொழில்நுட்ப மின் அளவிகளை பொருத்திட, 2020 பிப்ரவரி-1 பட்ஜெட்டில் பாரா- 58 -ல் சட்ட விரோதமாக மத்திய BJP அரசு அறிவிப்பு செய்துள்ளது.

**தமிழக மின்வாரிய பிரிப்பு**

மின்சார ஒழுங்குமுறை ஆணைய சட்டம் 1998-ன் பிரிவு 14 -ன் அடிப்படையில், தமிழகஅரசு

17.03.1999-ல் தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை (TNERC) உருவாக்கியதால், மின்கட்டணத்தை நிர்ணயம் செய்யும் உரிமையை முதலில் தமிழக அரசு பறிகொடுத்தது.

மின்சார சட்டம் 2003, பிரிவு 131(2) - ன் அடிப்படையில் மாநில அரசு, மாநில மின் வாரியங்களை மறுசீரமைப்பு செய்து "கம்பெனிகள் சட்டம் 1956" அடிப்படையில் "அரசு கம்பெனியாக வோ" அல்லது "ஒரு கம்பெனியாக வோ" அல்லது "கம்பெனிகளாகவோ" பதிவு செய்யவேண்டும். தமிழக அரசு அரசு ஆணை 114 நாள் 08.10.2008 மூலம் "தமிழக மின்வாரியம் லிமிடெட்" என்ற உடைமை நிறுவனத்தையும் "தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்" மற்றும் "தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்" என்ற இரண்டு துணை நிறுவனம் என மூன்று நிறுவனங்களையும் முழுமையாக அரசுக்கு சொந்தமானவை என்ற நிபந்தனையுடன் நிறுவப்பட்டு உள்ளது.

**பிரிந்த தமிழக மின்வாரியத்தின் செயல்பாடு**

இதை தொடர்ந்து "தொடரமைப்பு கழகம்" 15.06.2009 அன்று தனியாக பதிவு செய்யப்பட்டு 14.01.2010 முதல் பணிகளை துவக்கியுள்ளது. "தமிழக மின்வாரியம் லிமிடெட்"மற்றும் "மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்"ஆகிய இரு நிறுவனங்களும் 01.12.2009 அன்று தனித்தனியாக பதிவு செய்யப்பட்டன. மேலும் "தமிழக மின்வாரியம் லிமிடெட்" பணிகளை 12.03.2010 முதல் துவக்கி யுள்ளது மற்றும் "மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்" 16.03.2010 முதல் பணிகளை துவக்கி யுள்ளது.

மேற்கண்ட மூன்று அரசு நிறுவனங்களுக் கும் தனித்தனியாக தலைவர், மேலான்மை இயக்குனர் மற்றும் இயக்குனர்கள் தனித்தனி அரசு ஆணைகள் மூலம் ஏப்ரல் 2010-ல் போடப்பட்டு அவர்களும் பணியேற்ப்பு செய்து பணிபுரிந்து வருகின்றனர். மேலும் அரசு ஆணை 100 நாள் 19.10.2010 படி பொறுப்புகள் மற்றும் சொத்து பரிமாற்றம் மற்றும் பணியாளர்கள் இடமாற்றம் ஆகியவைகளை மூன்று வருடங்களுக்குள் செய்து, இதனை முத்தரப்பு ஒப்பந்தம் மூலம் உறுதி செய்து, முழுமையான பிரிப்பை செய்து முடிக்க உத்தர விடப்பட்டது, வாரியம் இதற்கு கால அவகாசம் கேட்டு வந்ததால் பிரிப்பு இன்று வரை முழுமையாக அமுலாக்கவில்லை..

## முத்தரப்பு ஒப்பந்தத்தின் நிலை

மேற்கண்ட பொறுப்புகள் மற்றும் சொத்து பரிமாற்றம் மற்றும் பணியாளர்கள் இடமாற்றம் ஆகியவைகளை எவ்வாறு செய்யலாம் என்பதற்கு வாரியம், கன்சல்டன்சி நிறுவனமாக " Feed Back Ventures" என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கி மாதிரி அறிக்கையை பெற்று,பணியாளர்கள் இடமாற்றம் மற்றும் ஓய்ஊதியம் குறித்த வரிய அறிக்கை மீது ஆலொசனை கேட்டு 04.11.2009 -ல் தொழிற் சங்கங்களுக்கு முதல் கடிதம் அளிக்கப்பட்டது.

இதில் பாரா 22 மற்றும் 23-ல் ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களின் ஓய்கூதியம் மற்றும் ஓய்வு பெற கூடியவர்களின், கிராஜூவிட்டி, லீவ் என்கேஷ்மெண்ட், GPF உள்ளிட்ட ஓய்வூதிய பலன்கள் வழங்க உரிய நிதி ஏற்பாட்டை தமிழக அரசே செய்யும் என வாரியம் உறுதி அளித்து இருந்தது. வாரியம் 29.01.2010 -ல் மேற்க்கண்ட பணியை செய்ய உறுப்பினர் விநியோகம் அவர்கள் தலைமையில் வாரிய உயர் அதிகாரிகள் 7 பேர் கொண்ட குழுவை அமைத்தது.

இதை தொடர்ந்து 05.06.2010 -ல் வாரியம் வழங்கிய ஆலோசனையில் பாரா 3-ல் ஓய்கூதிய பலன்கள் அனைத்தும் பிரிக்கப்பட்ட நிறுவனங் களின் பணப்புழக்கத்தை பொருத்து அமையும் என்பதோடு தற்போதுள்ள ஓய்கூதியர்களின் ஓய்வூதியத்தை TANGEDCO வழங்கும் என்ற ஆலொசனையை வாரியம் அளித்தது. மேலும் அரசு ஆணை 100 போடப்பட்ட அதே 19.10.2010 தேதியில், வாரியம் முத்தரப்பு ஒப்பந்தத்தின் வரைவு அறிக்கையை ஆங்கிலத்திலும் தமிழிலும் வழங்கிய தில், பாரா (19)ல் மேற்க்கண்ட ஒப்பந்தத்தை இந்த நிறுவனங்கள் அமல்படுத்த தவறும் பட்சத்தில் செயல் முறைப்படுத்தும் பொறுப்பை தமிழக அரசே ஏற்கும் என உறுதியளிக்கப்பட்டு இருந்தது.

இந்த சூழலில் 01.12.2010-ல் வாரியம் தொழிற்சங்கங்கள் கொடுத்த மாற்றங்களையும் நோக்கங்களையும் உள்ளடக்கியதாக கூறி மீண்டும் ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்திற்க்கான வரைவு அறிக்கையை அளித்தது. இதிலும் பாரா-7-ல் ஓய்கூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்களை, ஓய்வு பெறக்கூடியவர்களுக்கும்,ஏற்கனவே உள்ள

ஓய்வூதியர்/குடும்ப ஓய்கூதியர்களுக்கும் வழங்கு வதற்கு தமிழக அரசு நிபந்தனையற்ற உத்தர வாதத்தை அளிக்கும் என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதற்கு அடுத்ததாக மின்வாரியம் தமிழக அரசின் கருத்துகளையும் கேட்டு அதற்கு ஏற்ப 25.06.2012-ல் மீண்டும் ஒரு முத்தரப்பு ஒப்பந்த வரைவு அறிக்கையை தொழிற்சங்கங்களுக்கு அளித்தது.இதிலும் ஆட்குறைப்பு செய்யமாட்டோம் என்பதற்கு பாரா 5(3)லும்,ஊழியர்கள் தற்போது பெற்றுவரும் பல்வேறு சலுகைகள் தொடர்வதற்கு பாரா5(10)லும்,ஓய்கூதியம் மற்றும் ஓய்கூதிய பலன்களை, ஓய்வு பெறக்கூடியவர்களுக்கும், ஏற்கனவே உள்ள ஓய்கூதியர்/குடும்ப ஓய்கூதியர் களுக்கும் வழங்குவதற்கு பாரா 5(12)லும், தமிழகஅரசு "நிபந்தனையற்ற உத்தரவாதம்" அளிப்பதாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஆனால் வாரியம் தற்போது மேற்கண்ட 25.06.2012 தேதியிட்ட தமிழக அரசின் ஒப்புதலொடு வழங்கப்பட்ட வரைவு ஒப்பந்த அறிக்கை மீது தமிழக அரசின் தொழிலாளர் நல ஆணையர் (COL)அவர்களின் கருத்துகள் என ஏற்கனவே தமிழகஅரசு "நிபந்தனையற்ற உத்தர வாதம்" அளிப்பதாக குறிப்பிடப்பட்டு இருந்த அனைத்தையும் நீக்கி 13.01.2020-ல் ஒரு அறிக்கையை அளித்து தொழிற்சங்களிடம் கருத்து கேட்டுள்ளது.

அதாவது தமிழக அரசின் நிறுவனமாக பதிவு செய்யப்பட்ட இந்த அரசு நிறுவனங்களின் ஊழியர்களின் பல்வேறு சலுகைகள், உரிமைகள், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய சலுகைகள் அனைத் திற்கும் தமிழக அரசு உத்தரவாதம் தராது என தமிழக தொழிலாளர் ஆணையர்(COL) கருத்து கூறி இருப்பது அபத்தமானது.

## உரிமையை காக்க நீதிமன்றம் சென்ற CITU

அரசு ஆணை 100 நாள் 19.10.2010- ன் பாரா 6(17)-ல் ஊழியர்கள் மற்றும் ஓய்கூதியர்கள் பணப்பயன் அனைத்தும் அந்தந்த நிறுவனங்களின் பணப்புழக்கத்தை பொருத்தே அமையும் எனவும் பாரா-7 ல் மேற்கண்ட பணப்பயன் வழங்குவதில் பிரச்சனை ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழக அரசிடம் உரிய நிவாரணம் கேட்க உரிமை கிடையாது என அரசு நிறுவனத்தின் ஊழியர்களாக இருந்தாலும் அரசு கைகழுவி விட்டது.

இதனால்வழக்கு என்று P NO.24641/2010 மூலம் COTEE(CITU) நீதிமன்றம் சென்றது. வாரியம் இந்த வழக்கில் ஊழியர்களின் பென்ஷன் உள்ளிட்ட அனைத்து நலன்களும் பாதுகாத்திட நிபந்தனை யற்ற உத்தரவாதத்தை அளிப்பதாகவும், இதை உறுதிப்படுத்த அதற்கு தேவையான ஏற்பட்டை வாரியம் செய்யும் என எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள உத்தரவாதத்தை குறிப்பிட்டு, இந்த அரசுஆணை100- ன் அமலாக்கம் இந்த நீதிமன்றத் தின் இறுதி தீர்பிற்கு உட்பட்டது என 27.01.2011 அன்று இடைக்கால உத்தரவு பெறப்பட்டுள்ளது.

**ஊழலின் உச்சத்தில் உள்ள மின்வாரியம்**

மின்சட்டம் 2003-ன் திறந்தவழி மின்கொள்கை காரணமாக தமிழகத்தில் மட்டும் "GROSS SUBSIDY" யாக அதிக கட்டணத்தினை மின்வாரியத்திற்கு வழங்கும் , தொழிற்சாலை மின் இணைப்புகள் 1100 MW அளவுக்கு மின்சார வாரியத்தை விட்டு வெளியேறி விட்டதால் மின்வாரியத்தின் வருமானம் பெரிய அளவில் குறைத்துள்ளது.

அரசின் மின் உற்பத்தி நிலையங்களை நிறுத்திவிட்டு, தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் மின்சாரம் கொள்முதல் செய்யவேண்டும் என்பதற்காக CERC / TNERC போட்டுள்ள தவறான உத்தரவு காரணமாக தமிழக மின்வாரியத்தின் மின்நிலையங் கள் பல நாள்கள் "BACK DOWN" என்ற பெயரில் நிறுத்திவிட்டு தேவை இல்லாமல் தனியாரிடம் கூடுதலாக மின்கொள்முதல் செய்வதாலும் வாரிய கடன் கூடுதல் ஆகி வருகிறது.

மக்கள் நலனும், ஊழியர்களின் அனைத்து உரிமைகளும் கேள்விக்குறி ஆகியுள்ள இந்த நிலையில் மின் வாரியத்தின் வருமானைத்தையும், மின்வாரிய சொத்துக்கள் மீது அளவு கடந்த கடனையும் வாங்கி தனியாரிடம் இருந்து மின்சார கொள்முதல், நிலக்கரி, தளவாட பொருள்கள், அனல் மின் நிலைய பராமரிப்புக்கு உபகரணங்கள், மீட்டர்கள், உயர்/தாழ் அழுத்த மின்மாற்றிகள், மின் கம்பிகள்,கேபிள்கள் என பல்வேறு கொள்முதல்கள், புதிய மின் நிலையங்கள், உயர் மின்னழுத்த

கோபுரங்கள், புதிய துணைமின் நிலையங்கள், உயர் மின்னழுத்த புதைவடம் போன்ற நிர்மாணிக்கும் பணிகளின் டெண்டர்கள் ஆகியவற்றில் கடந்த பத்து ஆண்டுகளாக கட்டுக்கடங்காத ஊழலில் ஆட்சியாளர்களோடு சேர்ந்து உயர் அதிகாரிகளும் ஈடுபட்டதால் மின்வாரியம் தொடர் நஷ்டத்தில் இருந்து வருவதோடு இன்று 1.5 லட்சம் கோடி கடனில் உள்ளது.

இந்த மோசமான சூழலில் ஊழியர்கள், பொறியாளர்கள்,அலுவலர்கள் சேமித்து வைத்துள்ள முஞுகு பணத்தில் அவசர தேவைக்கு போட்டுள்ள கடனை கூட 6 மாதமாக வழங்காமல் உள்ள வாரியம் இந்த ஊழலை மட்டும் நிறுத்தாமல் ஆட்சியாளர் களும் உயர் அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து வாரியத்தை ஒட்ட ஒட்ட சுரண்டி வருகின்றனர்.

## மக்களோடு இணைத்து நிற்போம்

பிரிக்கப்பட்ட மின்வாரியம் தமிழக அரசு நிறுவனமாக இருந்தாலும் இதன் ஊழியர்களின் உரிமைகளுக்கு அரசு உத்தரவாதம் தர மறுக்கும் போது 3 கோடி மின் இணைப்புகளை கொண்ட இந்த பிரமாண்டமான மின்வாரியத்தில், 100 யூனிட் இலவசமாக பெற்றுவரும் 2 கோடி வீட்டு உபயோகிப்பாளர்களும், 22 லட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள், 11 லட்சம் குடிசைகளுக்கு இலவச மின் இணைப்புகள் மற்றும் 750 யூனிட் இலவசமாக பெற்றுவரும் 1.6 லட்சம் விசைத்தறி நெசவாளர்களுக்கும் சமூக அக்கறையோடு தமிழக அரசு தொடர வாய்பே இல்லை. இது அமல் படுத்தப்பட்டால் மின்சாரம் என்பது அத்தியாவசிய பொருள் என்பது மாறி ,ஆடம்பர பொருளாக மாறும்.மானிய விலையில் அல்லாமல் அதிக விலைக்கு மின்சாரம் செல்வதால் சமூகத்தின் ஏற்ற தாழ்வுகள் மேலும் மேலும் அதிகமாகும்.

எனவே அனைத்து தொழிலாளர்களும், பொறியாளர்களும்,அலுவலர்களும் சங்க வேறுபாடு களை கடந்து ஓர் அணியில் எழுந்து நின்று! மக்களோடு இணைத்து நின்று!... மின்வாரிய தனியார்மாயம் மூலம் சமூகமே சீரழிந்து போவதை தடுத்து நிறுத்த போர்முரசு கொட்டுவோம்.

**- கே. அருள் செல்வன்**

---

# இந்திய ஜனநாயகத்திற்கு எதிரான தாக்குதல்!



அரசியல் அமைப்பு சார்ந்த இந்தியாவின் ஜனநாயகம் தற்போது ஆபத்தில் இருக்கிறது. மக்களின் பேச்சுரிமை,எழுத்துரிமை,கருத்துரிமை பறிக்கப்படுகிறது. ஆளும் பி.ஜே.பி. அரசுக்கு ஆதரவாக யாரும் மாற்றுக் கருத்து சொல்லக் கூடாது.

மாற்றுக்கருத்து சொல் பவர்கள் தேசத்தின் விரோதிகளாக சித்தரிக்கப்பட்டு தேசத்துரோக சட்டத்தில் கைது செய்யப் படுகின்றனர். சமீபத்தில் பெங்க ளுருவில் நடந்த சிஐஏ எதிர்ப்பு போராட்டத்தில் அமுல்யா, டிலியோனா எனும் இதழியல் மாணவி பாகிஸ்தான் ஜிந்தாபாத் என முழக்கமிட்டதை அடுத்து தேசதுரோக சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமீபத்தில் உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் மோடி சர்வதேச அளவில் தொலைநோக்கு பார்வை கொண்டவர். பன்முகத்திறன் கொண்ட அறிவாளி என்று பிரதமர் மோடியை வைத்துக் கொண்டே புகழ்ந்து தள்ளி உள்ளார்.

இந்த நீதிபதியிடம் என்ன நியாயம் நாம் எதிர்பார்க்க முடியும்?

இந்தியாவில் ஊடகங்களை கார்ப்பரேட் நிறுவனத்திடம் ஒப்படைத்தாகி விட்டது. அதே போல நீதித்துறை இனி சாமான்யர்களுக்கு தீர்ப்பு வழங்குமா! என்ற கவலை எழுகிறது! இது இந்திய ஜனநாயகத்திற்கு இடப்பட்ட சவால்!

இந்த சவாலை முறியடிக்க தொழிலாளியின் ஒற்றுமையும், மக்கள் ஒற்றமையும் அவசியம் வர்க்க போராட்டத்தை முன்னெடுத்து செல்வோம். சுரண்டலற்ற சமூகத்தை உருவாக்குவோம்!.

**மின்வாரியப் பணியில் உள்ளவர்கள், பென்சன் தாரர்கள் மற்றும் குடும்ப பென்சன் தாரர்கள் கட்டணமில்லா சிகிச்சை புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெறுகின்ற பொழுது எற்படும் கருத்தில் கொண்டு நோடல் ஆபிசர் (குறை தீர்க்கும் அலுவலர்கள்) நியமிக்கும் வாரிய உத்திரவு**

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

SECRETARIAT BRANCH
144, ANNA SALAI,
CHENNAI-2.

**Memorandum No.36757/A18/A183/2019-5, Dated the 4th February, 2020.**

Sub: Medical Aid - New Health Insurance Scheme for Employees/Pensioners (including spouse)/Family Pensioners – Availing cashless Treatment – Appointment of Nodal Officers and Co-ordinators – Orders – Issued.

Ref: 1. (Per) CMD TANGEDCO Proceedings No.194 (SB), dt.01.08.2012.
2. (Per) CMD TANGEDCO Proceedings No.140 (SB), dt.30.07.2016
3. (Per) CMD TANGEDCO Proceedings No.191 (SB), dt.20.10.2018.

*****

In the Proceedings first cited, orders were issued introducing "the New Health Insurance Scheme 2012" to the employees of TANGEDCO for a block of four years from 01.07.2012 to 30.06.2016 through M/s.United India Insurance Company Limited. Consequent on expiry of the said scheme, orders were issued extending "the New Health Insurance Scheme 2016" through M/s.United India Insurance Company Limited to the employees of the TANGEDCO and their eligible family members from 01.07.2016 to 30.06.2020 – vide Proceedings second cited.

**2.** In the Proceedings third cited, orders have been issued implementing "the New Health Insurance Scheme 2018" for Pensioners (including spouse)/Family Pensioners/ Exgratia Beneficiaries of TANGEDCO through M/s.United India Insurance Company Limited Chennai, with effect from 1st November 2018.

**3.** It has been brought to the notice that the Employees/Pensioners/family pensioners face several difficulties in availing cashless facilities under the New Health Insurance Scheme, through M/s. United India Insurance Company Limited. It is felt that such difficulties arise only due to non-availability of a responsible person(s) from TANGEDCO's side who may take-up the issues to appropriate level for setting right the difficulties.

**4.** Accordingly, it is hereby ordered that the Deputy Secretary/Miscellaneous/ Secretariat Branch and the Under Secretary/Health Fund and RTI/Secretariat Branch, be appointed as Nodal Officer and Co-ordinator respectively in respect of employees. The Senior Deputy Chief Internal Audit Officer/Pension and the Deputy Chief Internal Audit Officer/Pension, be appointed as Nodal Officer and Co-ordinator respectively in respect of pensioners/family pensioners. In case of emergency, if any of the employee/pensioner find difficulties in approaching the representatives of MD India in connection with getting cashless treatment in the hospitals, they may approach the concerned Co-ordinators/ Nodal Officers of TANGEDCO. The Nodal Officers / Co-ordinators in turn, shall take all possible steps to redress the grievances of the employees/pensioners by suitably bringing up the issues to the concerned level. The contact numbers of the Nodal Officers and the Co-ordinators are given below:-

**I. For Employees:**

| Designation | Appointed as | Contact No. |
|---|---|---|
| **Deputy Secretary/Miscellaneous/ Secretariat Branch/Chennai** | Nodal Officer | **9445448857** |
| **Under Secretary/Health Fund and RTI/Secretariat Branch/Chennai** | Co-ordinator | **9445857151** |

**II. For Pensioners / Family Pensioners:**

| Designation | Appointed as | Contact No. |
|---|---|---|
| **Senior Deputy Chief Internal Audit Officer/Pension/ Audit Branch/ Chennai** | Nodal Officer | **9445859557** |
| **Deputy Chief Internal Audit Officer/ Pension/Audit Branch/ Chennai** | Co-ordinator | **9445853676** |

**5.** The receipt of this Memo. shall be acknowledged .

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S.VINEETH**
**SECRETARY (FULL ADDL. CHARGE)**

# கணக்கீட்டாளர் மற்றும் உதவிப்பொறியாளர் பதவிகளுக்கு நேரடி நியமனத்தில் வயது வரம்பு தொடர்பாக சர்வீஸ் ரெகுலேசன் - திருத்தம் - தொடர்பான உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

Establishment - Class II & III seruices - Direct Recruitment to the posts of Assessor and Assistant Engineer/ Electrical, Civil & Mechanical Fixing upper age limit for appointment to the posts of Assessors and Assistant Engineers - Amendment to Tamil Nadu Electricity Board Service Regulation -Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.2** **Dated : 15th FEBRUARY,2020**

Maasi-3, vikaari Aandu,
Thiruvalluvar Aandu 2051

**READ:-**

1. (Per) FB TANGEDCO Proceedings No.31(SB), dated 07.08.2019.
2. (Per) FB TANGEDCO Proceedings No.2 (Adm.Br), dt.07.01.2020.

**PROCEEDINGS:-**

In furtherance of the orders issued in the Proceedings read above and in exercise of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003 and G.O.Ms.No.100, Energy (B2) Department, dated 19.10.2010, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendment to the Tamil Nadu;Electricity Board Service Regulations:-

**AMENDMENT**

In the said Regulations, after sub-clause (ii) und.er clause (d) under sub-regulation (2) in Regulation 91, the following Proviso shall be added:

"Provided that the relaxation on upper age limit as specified in sub-clauses (i) and (ii) above, shall not be applicable for selection and appointment to the following posts by Direct Recruitment:

(1) Assessor;

(2) Assistant Engineer/Electrical, Civil and Mechanical".

2. The receipt of these proceedings shall be acknowledged.

**( BY ORDER OF THE BOARD )**

**S. VINEETH,**
**SECRETARY ( FULL ADDITIONAL CHARGE )**

## வாரியப்பணியில் சேரும் பொழுது கல்வி சான்றிதழ் உண்மை தன்மை அறிவது - சம்மந்தமான உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH,**

144, ANNA SALAI, CHENNAI - 2

**Memorandum No.68638/A18/A181/2019-1 dated the 4th February 2020.**

Sub : Establishment - Educational Qualification - Entry of candidates with bogus educational qualification and other certificates - Verification of its genuineness - Certain additional instructions - Issued.

Ref : (1) Memo.(Per) No.18630//A18/A182019-1(SB), dated 04.04.2019.
(2) Memo.(Per) No.48608/A18/A182019-1(SB), dated 28.11.2019.

In the Memo. first cited, instructions have been issued to all the Appointing Authorities to complete the process of verification of genuineness of the educational qualification certificates in respect of the left out cases and to affix a copy of the same in Service Registers of employees, on or before 31.05.2019. Reiterating the said instructions, all the Chief Engineers/Superintending Engineers were requested to ensure that genuineness of all the educational certificates of the officers /employees working under their control is verified and a copy of the same affixed in the Seruice Registers of the concerned officers/employees, on or before 15.02.?020 - vide Memo. second cited.

2. It has been brought to the notice that apar from the academic qualifications, the genuineness of ceftificates pertaining to other pre-requisite qualifications for appointment to the initial level cadre, is not verified by the Appointing Authorities.

3. Therefore, all the Appointing Authorities are hereby instructed to ensure that apart from verifying the genuineness of the academic qualifications of all the officials as per the instructions issued earlier, the genuineness of certificates pertaining to other pre-requisite qualifications is also verified.

4. Fufther, in respect of future recruitments, the Appointing Authorities are instructed to complete the process of verification of all the relevant ceftificates before declaration of probation of the employees. If the said process gets delayed for valid reasons, the probation of the officials/ employees should be extended till the verification process is over.

5. Any violation of the above instructions will be viewed seriously.

6.The receipt of this Memorandum shall be acknowledged.

**( BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR )**

**S. VINEETH,**

**SECRETARY ( FULL ADDITIONAL CHARGE )**

வாரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்று குறுகிய காலத்தில் மருத்துவ திட்டத்திற்கான காப்பீடு அட்டை பெறாதவர்கள் இந்த படிவத்தின் மூலம் தாண் பணி ஓய்வு பெற்ற வட்டத்தில் இருந்து சான்று பெற்று கட்டணம் இல்லா சிகிச்சை/ அறுவை சிகிச்சை செய்ய வழிவகுக்கும் வாரிய உத்தரவு.

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH,**

144, ANNA SALAI, CHENNAI - 2

**Memorandum No.36757/A18/A183/2019-4 dated 04.02.2020.**

Sub : Medical Aid - Ncw Health Insumnce scheme 2018 for pensioners (including spouse)/ Famity pensioners - Availing cashless Treatment / surgeries - Issuance of a certificate to the retiring officials - Instructions - Issued.

Ref : (Per) CMD TANGEDCO Proceedings No. 191(SB), dated 20.10.2018.

In the Proceedings cited orders have been issued implementing the New Health Insurance Scheme, 2018 for Pensioners (including spouse) / Family pensioners / Exgratia Beneficiaries of TANGEDCO through M/s. United India Insurance Company Limited, with effect from 1st November, 2018.

2. It has been brought to the notice that in case of non-allotment of PPO and non-Commencement of deduction of subscription towards NHIS - 2018 from the employees / officials who have just retired from TANlGEDCO's service, find it difficult to avail cashless treatment under the said scheme. The difficulties experienced by such retired official have been carefully examined in consultation with Ms.United India Insurance Company Limited and it has been decided to issue a certificate to all the retiring employees, if required, which can be produced by them at the network hospitals, to avail cashless treatment under NHIS -2018, until Health Insurance Identity Cards are issued by M/s.United India Insurance Company Limited.

3. Accordingly, all the Pension Sanctioning Authorities are hereby instructed to issue a certificate to the retiring officers / employees who retire from their Circles Offices, on the date of their retirement as in the format annexed to this Memo., so as to enable them avail cashless treatment /surgery under New Health Insurance Scheme -2018.

4. The receipt of this Memo. shall be acknowlecged.

**( BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR )**

**S. VINEETH,**
**SECRETARY ( FULL ADDL. CHARGE )**

**CERTIFICATE**

**TO WHOMSOEVER IT MAY CONCERN**

This is to certify that Thiru/Tmty ----------------------------------------(Name & esignation) has retired from the O/o --------------------------------------------------TANGEDCO on --------------------------------------- Superannuation/ V.R. and he/she is eligible for taking cashLesss treatment under "the NHIS-2018 to the pensioners (Including spouse) family pensioners". This certificate shall be valid till the issuance of Health Insurance Indetity Cards by M/s. United India Insurance company Limited.

**SUPERINTDING ENGINEER**

# பணித்தொகுதி 2 மற்றும் 3ம் தொகுதிகளில் நேரடி பணி நியமணம் பெறுபவர்களுக்கு வயது வரம்பு சம்மந்தமாக பணி விதிகளில் திருத்தம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

Establishment - Class II & III seruices - Direct Recruitment to the posts of Assessor and Assistant Engineer/ Electrical, Civil & Mechanical Fixing upper age limit for appointment to the posts of Assessors and Assistant Engineers - Amendment to Tamil Nadu Electricity Board Service Regulation - Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.2** **Dated : 15th FEBRUARY,2020**

Maasi-3, vikaari Aandu,
Thiruvalluvar Aandu 2051

**READ:-**

1. (Per) FB TANGEDCO Proceedings No.31(SB), dated 07.08.2019.
2. (Per) FB TANGEDCO Proceedings No.2 (Adm.Br), dt.07.01.2020.

**PROCEEDINGS:-**

In furtherance of the orders issued in the Proceedings read above and in exercise of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003 and G.O.Ms.No.100, Energy (B2) Department, dated 19.10.2010, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendment to the Tamil Nadu;Electricity Board Service Regulations:-

**AMENDMENT**

In the said Regulations, after sub-clause (ii) und.er clause (d) under sub-regulation (2) in Regulation 91, the following Proviso shall be added:

"Provided that the relaxation on upper age limit as specified in sub-clauses (i) and (ii) above, shall not be applicable for selection and appointment to the following posts by Direct Recruitment:

(1) Assessor;

(2) Assistant Engineer/Electrical, Civil and Mechanical".

2. The receipt of these proceedings shall be acknowledged.

**( BY ORDER OF THE BOARD )**

**S. VINEETH,**
**SECRETARY ( FULL ADDITIONAL CHARGE )**



அதிமுக தொழிற் சங்க கல்லிடைகுறிச்சி கோட்ட தலைவர்
**தோழர் ஏ. முருகன்** வருவாய் மேற்பார்வையாளர்,
ஆழ்வார்குறிச்சி அவர்கள் 29.02.2020 அன்று வாரியப்
பணிஒய்வு பெற்றார். அவரது பணப்பயன்கள் அனைத்தும்
பெற்றுத் தந்த நமது சங்கத்தை பாராட்டி
சிஐடியு நிதியாக ரூ. 500/-ம்,
மின்கதிர்வளர்ச்சி நிதியாக ரூ. 500/-ம் அளித்தார்.
வாழ்த்துக்கள்

## மாநிலம் முழுவதும் கேங்மேன் பயிற்சி முகாம்







## மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் சென்னையில் உண்ணாவிரதம் அனைத்து திட்டங்களிலும் மாலை நேர ஆர்ப்பாட்டம்









43

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2018 - 2020
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2018 - 2020
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 9.03.2020.



**உழைக்கும் வர்க்கம்**
**தனது நலனுக்காக போராடுவது**
**மட்டுமல்ல... தேசத்தின் இறையான்மையும்**
**மதச்சார்பின்மையும் பாதுகாப்பது**
**நமது தலையாய கடமை**
**வர்க்கத்தை இணைப்போம்!**
**தடைகளை உடைப்போம்!!**











Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian

44